26 வது ஆண்டுவிழாவை முன்னிட்டு
அரைச்சலார்
28-6-65 முதல்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 15

# ஈழநாடு

National Tamil Daily தேசிய தினசரி
மலர் 7 (27-6-65) இதழ் 136
விசுவாவசு ஆனி 13 வைர் பிறை 26 ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

## 'இரத்ததானம் செய்யுங்கள்'
### யாத்திரீகர்களிடம் யாழ்ப்பாண பிஷப் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு
இரத்ததானம் வழங்குமாறு மக்களை மேலும்ஊக்குவிக்கும் பணியை யாழ்ப்பாண பிஷப் டாக்டர் எமிலியானஸ்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் நடைபெறவிருக்கும் மடுமாதா பெருநாளின் போது 'உயிரைக் காப்பாற்றுவதற்காக இரத்ததானம் செய்யுங்கள்' எனப்பக்தர்களை பிஷப் கேட்டுக்கொள்வாரெனஅறியப்படுகிறது.

யாழ்ப்பாணம் நடமாடும் இரத்தசேமிப்பு வங்கி அடுத்தமாதம் முதல் திகதி மடுவுக்கு செல்வதற்குஅவர் அனுமதி அளித்துள்ளார். இந்த வங்கி அங்கு இரத்தம் சேகரிக்க அனுமதிக்கப்படும். இதனல் இரத்ததானம் வழங்க விரும்பும் யாத்திரிகர்களுக்கு அங்கு இரத்ததானம் வழங்கக்கூடிய சந்தர்ப்பமிருக்குமெனக் கருதப்படுகிறது.

மடுவில் சுமார்100பைந்து இரத்தம் சேகரிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வளவு அதிகமான அளவு இரத்தத்தைச் சேகரித்து வேறிடத்துக்கு கொண்டு செல்வதற்கு இதுவரை இல்லாதிருந்த சாதனக் குறைபாட்டை நீக்கும் பொருட்டு முதலியார் மகேசன் 300 ரூபாவுக்குமேலான பெறுமதியுள்ள குளிர்சாதனப் பெட்டியை யாழ்ப்பாணம் இரத்தசேமிப்பு வங்கிக்கு அன்பளிப்புச்செய்துள்ளார். இது மடுவிலிருந்து சேகரிக்கப்பட்ட இரத்தத்தை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவர பெரிதும்உதவுமெனத் தெரிகிறது.

# 'சகலரும் சமமாக நடத்தப்படுவர்'
## ராஜாங்க மந்திரி ஜே. ஆர். உறுதி

கொழும்பு, சனி
'தேசிய அரசாங்கத்தின் கீழ் சகல பிரஜைகளும் சமமாக நடத்தப்படுவர். எந்த வித பாகுபாடும் காட்டப்படமாட்டாது.'

இவ்வாறு ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர்.ஜெயவர்த்தன வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் கண்காட்சி ஒன்றை திறந்து வைத்துப்பேசுகையில் தெரிவித்தார்.

கல்லூரி வாசலில் திரு. ஜெயவர்த்தனவையும் அவரது பாரியாரையும் சைவ மங்கையர் கழகத் தலைவர் திருமதி பி. நமசிவாயம் கல்லூரி அதிபர், ஆசிரியைகள், மாணவிகள், சேர்.பரராஜசிங்கம், செனட்டர் நடேசன், டாக்டர் பாலேந்திரா உட்படப் பல பிரமுகர்கள் வரவேற்றனர்.

இதன்பின்னர் திரு.ஜெயவர்த்தன கல்லூரியிலுள்ள கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு நடைபெற்ற பூஜையை அவரும்பாரியாரும்தரிசித்தனர்.

தம்மையும் தமது மனைவியையும் அழைத்ததற்காக கல்லூரி ஸ்தாபனத்தாருக்கு நன்றி தெரிவித்துவிட்டு திரு. ஜெயவர்த்தனமேலும் பேசியதாவது:

தனியார் பாடசாலைகள் சம்பந்தமாக நான் எதுவும் சொல்வதற்கில்லை. தனியார் பாடசாலைகளுக்கு உதவியளிப்பதுபற்றியும் இன்னும் முற்ருகத் தீர்மானிக்கப்படவில்லை. நான் உங்களுக்கு உறுதியாகச் சோல்ல விருப்பது என்னவெனில் இந்துக்கள், பௌத்தர்கள், கத்தோலிக்கர்கள் என்ற ரீதியில் எவரிடமும் பாகுபாடு காட்டப்பட மாட்டாது என்பதே

கல்விக்கொள்கை கல்வி மந்திரியால் தயாரிக்கப்பட வேண்டிய ஒன்று. எனவே இது விஷயமாக நான் எதுவித உறுதியும் அளிக்கமுடியாத நிலையிலிருக்கின்றேன்.

யாருக்காவது உதவி செய்யலாமென்ற நோக்கத்தில் நான் திறைசேரியைப்பார்த்தேன் ஆனல் அங்கு ஒன்றும் இருக்கவில்லை. தனிப்பட்ட முறையில் என்னல் எதனைச் செய்யமுடியுமோ, அதனை நான் செய்வேன்.

## ஆரம்பிக்கப்பட்டது 1960-ல்; இன்னமும் இயங்கவில்லை!
### ஒட்டிசுட்டானில் ஓட்டுத்தொழிற்சாலை

வவனியா, ஞாயிறு
ஒட்டிசுட்டானில் 1960ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட ஓட்டுத் தொழிற்சாலை இதுவரைகாலமும் இயங்கத் தொடங்கவில்லையென அறியப்படுகிறது.

இதற்கென அடிக்கல் நாட்டி ஆரம்பிக்கப்பட்ட கட்டடம் இன்னும் பூர்த்தியாகவில்லை. தொழிற்சாலைக்கென வந்திறங்கிய சில இயந்திரங்களும் இதுவரை பொருத்தப்படாதிருந்து இப்போது வேறுபகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் ஓட்டுத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்பட்டதன் காரணமாக எடுத்துச்செல்லப்பட்டுவிட்டனவாம். இந்த நிலையில் இந்த (இயங்காதிருக்கும்) ஓட்டுத்தொழிற்சாலை வேறிடத்துக்கு இடமாற்றம் செய்யப்படுமோ என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

வவனியா எம், பி. திரு. டி, சிவசிதம்பரம் கைத்தொழில் மந்திரியிடம் இது பற்றிஎடுத்துக்கூறியுள்ளார். இதுவிஷயத்தில் அக்கறை காட்டி இங்கு தொழிற்சாலை ஒழுங்காக இயங்க விரைவான நடவடிக்கை எடுக்குமாறும் திரு. சிவசிதம்பரம் மந்திரியைக் கேட்டுள்ளார்.

## நாகபாம்புடன் 7 மணி நேர பயணம்!

வவனியா, சனி
வவனியா சமூக சேவைப்பகுதி உத்தியோகத்தர் திரு.விஜயரத்தினத்தின்காருக்குள் 7 மணித்தியாலம் உல்லாசப் பிரயாணம் செய்த நாகபாம்புகடைசியில் தானும் கார் ஓட்ட எண்ணியதால் இறக்க நேரிட்டது.

சமூக சேவைப்பகுதி உத்தியோகத்தர் தனது கடமை காரணமாக அவரின் காரில் நீண்ட தூரம் பிரயாணம் செய்துவிட்டு வவனியாக் கச்சேரியில் 10 நிமிடம் தாமதித்துவிட்டு திரும்பவும் காரை எடுத்து ஓட்டிக்கொண்டு வரும்போது காரின்வேகம்60மைலில் வரும்போது அவரது ''ஸ்ரேய''ரிங்கில், நாகபாம்பு தனது தலையை நீட்டியதும், உடனடியாக கடும் 'பிரேக்' போட்டு காரை நிறுத்தி மற்றக் கதவால் இறங்கிய பொழுது, பாம்பு நேரடியாக ''ஸ்ரேய'' ரிங்கில் இருந்துகொண்டது.

அச்சமயம் வேறு ஆட்களின் உதவியுடன் பாம்பை வெளியில் எடுத்து அடித்துவிட்டார்கள். இப்பாம்பு 7 மணித்தியாலங்கள் வரை காரில் பிரயாணம் செய்துள்ளது!

சாவகச்சேரியில்

## மந்திரி திருச்செல்வத்துக்கு வரவேற்பு

சாவகச்சேரி, ஞாயிறு
சாவகச்சேரிநகரசபையின் அழைப்புக்கிணங்க ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் நேற்றுக்காலை புகையிரத மூலமாக சாவகச்சேரி வந்திறங்கினுர்.

மந்திரியைப் புகையிரத நிலையத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. இ. சிவசிதம்பரப்பிள்ளை, யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி. மாணிக்கவாசகர், சாவகச்சேரி நகரசபைத்தலைவர் இ. டா. சிவகுரு, சாவகச்சேரி நகரசபை அங்கத்தவர்கள், சாவகச்சேரி கிராமசபை அங்கத்தவர்கள் உட்பட பெருந்திரளானேர் புகைபிரத நிலையத்தில்மந்திரியை வரவேற்றனர். பின்னர் அமைச்சரும் அவரது பாரியாரும் சாவகச்சேரி வாடிவீட்டுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். வாடிவீட்டு வாசலில் திரு. வி. சுப்பிரமணியம் மந்திரியை மாலையிட்டுவரவேற்ருர். வாடிவீட்டில் திரு. திருச்செல்வத்துக்கும் அவரது பாரியாருக்கும் தேநீர் விருந்தளிக்கப்பட்டது. அங்கு அமைச்சருக்கு சாவகச்சேரி எம். பி. வந்திருந்தவர்களை அறிமுகம் செய்துவைத்தார். சிலமணிநேர சம்பாஷணையின் பின்னர் அமைச்சரும் பாரியாரும் யாழ்ப்பாணம் கிங்ஸ் ஹவுஸுக்கு காரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

## 'விதை நெல் வழங்குக'
### எம். பி. கோரிக்கை

வவனியா, ஞாயிறு
வவனியா மாவட்டத்தில் சூருவளியினுல் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு விதை நெல் வழங்குமாறு வவனியா எம். பி. திரு. தா. சிவசிவதம்பரம் உணவு விவசாய மந்திரியைக் கேட்டுள்ளார்.

'தேசிய அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த முயற்சியில் முதலாவது நடவடிக்கையாக நெல்உற்பத்தியைப் பெருக்கவேண்டும். விவசாயிகளுக்கு விதைநெல் வழங்குவதன் மூலம் அவர்களது நிலைமை சீராகுவதுடன் நாட்டின் உணவு நிலைமையும் சீராகும் என திரு, சிவசிதம்பரம் மந்திரிக்கு எடுத்துக் கூறியுள்ளார்,

## எழுது வினைஞர் சங்க கிளைக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் வவனியாக் கிளையின் வருடாந்தக் கூட்டம் வவனியா நகர மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது, சங்கத்தின் தலைவர் திரு. எஸ். கோடீஸ்வரன், அரசாங்க ஊழியர் நிலை பற்றியும், மொழிப்பிரச்னையால் அங்கத்தவர்கட்கு ஏற்பட்டுள்ள சங்கடங்கள்பற்றியும் இவை சம்பந்தமாகத் தாய்ச் சங்கத்தால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றியும் மிகவும் தெளிவாக விளக்கினுர். பின்வருவோர்நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏ. இரத்தினசிங்கம். உப தலைவர்! திரு. எஸ். சிற்றம்பலம். செயலாளர்: திரு. செ. பஞ்சலிங்கம். உதவிச் செயலாளர்: திரு. பி. ஜெ. பீற்றர். பொருளாளர்: திரு. பி. நாகராசா. மற்றும் ஐவர் கொண்டகமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

## 'அரசாங்க சேவையில் பாகுபாட்டை அகற்றுக'
### அஞ்சல் எழுதுவினைஞர் சங்க தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு
''1956-ம் ஆண்டிற்குமுன் யாவருக்கும் பொதுவென இருந்த அரசாங்க சேவை, அன்று ஆட்சிபீடத்திலிருந்தவரின் சிங்களம் மட்டும் சட்ட அமுலினுல், இப்பொதுத்தன்மையை இழக்க ஆரம்பித்ததோடு, சிங்கள அறிவுடையவர்களுக்கே இனி அரசாங்கசேவை என்ற புதிய உருவையும் எடுக்க ஆரம்பித்தது. அதனுல், தமிழரசாங்க ஊழியர்களான எமக்கு ஏற்பட்ட தொல்லைகளும் துன்பங்களும் சொல்லும் தரமன்று.

ஆரம்பத்தில் வேதன உயர்வுகளை இழந்து வேதனைப்பட்டநாம், அடுத்துப் பதவி உயர்வுகளையும் பறிகொடுத்துப்பரிதவித்தோம். தினம் ஒரு திறைசேரிச் சுற்றறிக்கை வெளிவந்து எம்மைத் திடுக்குற வைத்தது. நித்திய கருமங்களைக் கூடச் செவ்வனே செய்ய முடியாதவாறு நிம்மதியற்று எம்மோடு கடமையாற்றும் சக ஊழியர்களின் கேலிக்கும் நிஷ்டூரமான பழிப்புகளுக்கும் ஆளாகி, எம்முள்ளே வெதும்பி வேதனைப்படவேண்டியிருந்தது.''

இவ்வாறு அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் நான்காவது ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் சங்கத்தலைவர் வே. கனகசபைமுதலி தமது தலைமையுரையில் கூறினுர்.

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அறிவித்தல்

**சுத்தமான நல்லெண்ணை**
**மா. மு. இளையதம்பிச்செட்டியார்**
**13, முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை**

கறுவாக்காடு, வெள்ள வத்தை, பம்பலப்பிட்டி, தெகிவளை, நுககொடை, கொம்பனித்தெரு, கொட்டாஞ்சேனை, உணுப்பிட்டி ஆகிய இடங்களில் பிரபல நல்லெண்ணை வியாபாரியாக இருந்த மா. மு. இளையதம்பிச் செட்டியார் காலமாகிவிட்டபடியால் அவருடைய வியாபாரத்தை மேற்குறிப்பிட்ட இடங்களில் நாங்கள் மூடிவிட்டோம். தற்பொழுது எங்கள் வாடிக்கைக் காரருக்காக 13, முருகமூர்த்திவீதி வண்ணார்பண்ணையில் அவரின் மனைவியாகிய இ. பெண். பொன்னம்மா ஆகிய நான் திறம்பட நடாத்தி வருகிறேன். உடலுக்கும் மூளைக்கும் கண்ணுக்கும் குளிர்ச்சியூட்டத்தக்கதாக இளநீர் விட்டு பாகம் செய்யப்பட்ட சுத்தமான நல்லெண்ணையை குறிப்பிட்ட விலாசத்தில் எமது வாடிக்கைக்காரர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இ. பொன்னம்மா

434


# உங்கள் இராசி பலன்

## எழுதுவது

## சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[விசுவாவசு ஆனி மீ 13ஞாயிறு (27-6-65 முதல் 19 சனி (3-7-65) வரையுள்ள உங்கள் பலன்கள்]

### மேட இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் நல்லோர் சேர்க்கையால் வாழ்க்கை செழிப்புறுதல், தொழிலில் நல்ல இலாபம் கிட்டல், குடும்பத்தில் சுகம், சுபகருமமுயற்கிகள் நடத்தல், தேகாரோக்கியச்சிறப்பு, பொருள் வரவு, கமத்தொழிற்சிறம்பு, கல்வி விருத்தி. வர்த்தகச் சிறப்பு. உத்தியோக உயர்வு, பெண்களுக்கு சுபீட்ச நிலைமை ஆகியனகாணப்படுகின்றன.

### இடப இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் நண்பரால் உதவி கிட்டல், தேகாரோக்கியம், குடும்ப சுகம், கொடுக்கல் வாங்கலில் பணப் புழக்கம் அதிகரித்தல், எதிரிகள் வீழ்ச்சி, செய்தொழிலில் மத்திம பலிதம், கல்விவிருத்தியாதல், கமத்தொழிலில் மத்திம பலிதம், உத்தியோகத்தில் அதிகாரிகள் விடயத்தில் விழிப்பு அவசியம், பெண்களுக்குகுணமாறுபாடு மதிப்புக்குறைதல், ஏமாற்றம் ஆகியன காணப்படுகின்றன.

### மிதுன இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் செய்தொழிலால் பொருள் வரவு, குடும்ப சுகம். சுபகருமக் கொண்டாட்டங்கள். செலவதிகரிப்பு, நண்பர்-இனபந்துக்கள் சேர்க்கை, கமத்தொழில் இலாபம், மாணவர் பரீட்சை வெற்றி, கல்விச் சிறப்பு, உத்தியோகச்சிறப்பு தேகாரோக்கியக் குறைவு, கமத்தொழிலில்மத்திம பலிதம், வர்த்தகச்சிறப்பு, பெண்களுக்கு ஏமாற்றம், பணமுடை, மதிப்புக்குறைதலுண்டு.

### கடக இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் உடல்ரோகம், செய்தொழில் நட்டம். மதிப்புக் குறைதல், எதிரிகளால் தொல்லைகள், நண்பர்-உறவினர் பகை, குடும்பக்கஷ்டம், பரீட்சைகள் மத்திம பலிதம், கமத்தொழில்—வர்த்தகம் பலிதக் குறைவு, பெண்களுக்கு எதிர்பாராத நன்மைகள் கிட்டல். பணவசதி, உத்தியோகத்துறையில்படிப்படியான வளர்ச்சி, ஆகியன உண்டாம்.

### சிங்க இராசி

இவ்விரசியாளருக்கு இவ்வாரம் அதிக கஷ்டங்கள் காணப்படும், பணக்கஷ்டம், செய்தொழில்கஷ்டம், அதிக செலவு, குடும்பத்தில் அமைதியின்மை, உடல்ரோகம், கமத்தொழில் பலிதக் குறைவு, வர்த்தகத்துறை மத்திமபலிதம், கல்வித் துறை பலிதக்குறைவு, உத்தியோகத்துறை ஊழியர் தொல்லை, அதிகாரிகள் சச்சரவு, பெண்களுக்கு ஏமாற்றம், மதிப்புக் குறைதல், பணமுடை ஆகியன உண்டாம்.

### கன்னி இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில்உடல்நலச்சிறப்பு,

(5-ம் பக்கம் பார்க்க)





தன் குடும்பத்திற்கு சமைத்து, இடித்தல், அரைத்தல் போன்ற கடினமான வேலைகள் செய்து, ஆடைகள் துவைத்து, பிள்ளைகளையும் வளர்த்தெடுத்து, அல்லும் பகலும் உழைக்கும் அவளுக்கு குன்றாத பெலனும் சக்தியும் அவசியம். ஆகவே அவளுக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவளை அனுதினமும் சளைக்கா சக்தியுடன் சுகமாக இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனால் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

**மாவுப் பொருள்**
**சர்க்கரைப் பொருள் அற்ற,**
**B விட்டமின் நிறைந்த,**
**தூய்மையான,**
**தாவர உணவுப்**
**பொருள்.**

# மாமைட்






## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வவனியா புதிய பஸ் நிலையத்திற்கு கிட்ட கண்டி ரேட்டில் 2 பரப்பு கடைக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சி. ஆர். செல்லத்துரை, சந்திரா தோட்டம், தச்சன் குளம், வவனியா என்ற விலாசத்தில் விசாரிக்கவும். 565

வண்டிக்கடைஒன்று 9 அடி நீளம், 6 அடி அகலம். சில்லுகள் இரும்பினால் செய்யப்பட்டது. இரும்பு வேலைகள் கூடியது. சாமான்கள் வைத்து விற்பனை செய்வதற்கு சகல வசதிகளும் உள்ளே செய்யப்பட்டிருக்கிறது. கோயில் திருவிழாக் காலங்களிலும் வேறுவிசேஷ தினங்களிலும் அவ்விடத்திற்கு கொண்டு சென்று வியாபாரம் செய்யக்கூடிய கடை. வீ. சிவசம்பு, 30, கேசாவில் பிள்ளையார் வீதி, வண்ணார்பண்ணை மேற்கில் பகல்நேரத்தில் பார்வையிடலாம். 547

நீர்வேலி தெற்கு அரசாங்கக் குடியேற்றத் திட்டமாகிய கொலனிக்குத் தெற்குப் பக்கத்திலும், வயிரவகோவிலுக்கு வடக்குப் பக்கத்திலும் 3 அறைகள் கொண்ட 2 பரப்பும், அதன் அருகில் 8 பரப்பும் காலஞ்சென்ற திரு. சின்னத்தம்பியின் காணி விற்பனைக்கு உண்டு. வீடும் 2 பரப்பையும் தனித்தும் 8 பரப்பை இரண்டாகப் பிரித்தும் அல்லது ஒருமித்தும் விலைக்குக் கொடுக்கப்படும். விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரில் காணவும். விற்பனையாளர், கே. கே. அம்புரோஸ், நம்பர் 16 மடம் வீதி, யாழ்ப்பாணம். 555

### தேவை

அப்பளம் தயாரிப்பதில் நன்கு அனுபவமுள்ள ஓர் ஆண் அல்லதுபெண்தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். விளம்பர இல: 567, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 567

### கல்வி

ஆடி மாதத்தில் எங்கள் ஜி. சி. இ. சாதாரணம், வர்த்த வகுப்புகளில் சேரும் 15 மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படும். விபரங்களுக்கு எழுதவும். யூனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி, 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 551

ஜி. சி. ஈ. ஆவணி/புரட்டாசி பரீட்சைக்கு கலை/விஞ்ஞான வகுப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடத்தப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. வார நாட்களில் நண்பகல் 12-00தொடக்கம் பி. ப. 6-00 மணிவரை தொடர்புகொள்ளவும், அதிபர், ஸ்ரீ நாகவிகாரை சிங்கள பாடசாலை, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம். 566

தொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### வைத்தியம்

சலரோகம், தொய்வு, வாதம், கிரந்தி, தீட்டு இறைத்தல், புத்திரப்பேறு. தகுந்தமுறையில் வைத்தியம் செய்பவர். பொ. செல்லையா, வைத்தியர், கந்தர்மடம் யாழ்ப்பாணம். 390


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைத் தொழிலும் எழுத்தாளரும்

**பெரும் பணம் இல்லாமல் பத்திரிகை நடத்தமுடியுமா? எழுத்தாளனுக்கு ஏட்டுச்சுரைக்காயை அல்லாமல் தொழில் நுணுக்கம் என்ன தெரியும்? மனச்சாட்சி, கத்தரிக்காய் என்றெல்லாம் பேசாமல் தந்திரமாய் நடந்து கொள்ளும் எழுத்தாளனைத் தவிர மற்றவனால் எல்லாம் எப்படி வெற்றிகாணமுடியும்?**

**என்று இந்த மாதிரியெல்லாம் பேசுவோர் இருக்கிறார்கள். எழுத்தாளனென்றாலே கற்றறி மூடன், உலகந்தெரியாதவன், மனச்சாட்சி என்பதே தேவைப்படாதவன் முடிவாக அவன் ஒரு கூலிக்காரன் என்ற மாதிரியெல்லாம் கூறுவது சுத்தப்புரட்டு; அல்லது மௌட்டிகம். உலகம் தெரியாமல் உலகத்தைப்பற்றி எவனாவது எழுத முடியுமா?**

**மனச்சாட்சியே பார்த்தன்; மதியே கண்ணன். எங்கே யோகேசுவரனான கண்ணன் இருக்கிறானோ, எங்கே தனுத்தரனான பார்த்தன் இருக்கிறானோ, அங்கே வெற்றியும் செல்வமும் இன்பமும் தானாகவே வந்து நிறையும்.**

இப்போது பத்திரிகைத் தொழில் பற்றிப் பல தவறான எண்ணங்கள் உலவுகின்றன. ஜனநாயகத்தின் நாலாவது தூண் பத்திரிகைகள் என்ற எண்ணம் இன்று நலிவடைந்து கிடக்கின்றது. அதற்கு யாரைக் குறைகூறுவது என்றுதான் எனக்குத் தெரியவில்லை. புரியவுமில்லை.

சில பெருந் தலைவர்கள் பத்திரிகைச் சுதந்திரம் பற்றிப் பேசுவார்கள். ஆனால் அவர்கள் எண்ணுவது பணம் படைத்தவரின் சுதந்திரமே. பணம் படைத்தவரோ மேலும் பணம் சேர்க்கும் முறைகளுக்குச் சற்றும் இடையூறில்லாத நிலையே பத்திரிகைச் சுதந்திரம் என்று எண்ணுகிறார்கள்.

முன்னேற்றமான ஜனநாயக நாடுகளிலே, சுதந்திரமான பத்திரிகை எழுத்தாளர்கள் (Free Lance Journalists) இருக்கிறார்களே, அந்த மாதிரி ஓர் எழுத்தாளனாவது நமது நாட்டில் இருக்க முடிகிறதா? பத்திரிகைச் சுதந்திரம் என்றால், பத்திரிகை எழுத்தாளனின் மனச்சாட்சிப்படி எழுத இடம் அல்லவா வேண்டும்? பத்திரிகை எழுத்தாளனை எவனும் தன்னை ஒரு தொழிலாளி போல் பாவிக்கக்கூடாதென்று தீவிரமாய் பேசும் தலைவர்கள்கூட உண்மையில் அவனை ஒரு கூலிக்காரன் போலவே பாவித்து நடத்துகிறார்கள்.

பத்திரிகைத் தொழில் என்பது இன்று ஒரு பெருந்தொழில் (Industry) ஆகியிருக்கிறது. அந்தப் பெருந்தொழிலின் முதலாளி ஒரு வரி கூட எழுதமாட்டார். அதற்கு வசதியோ அவகாசமோ அருக்குக்கிடையாது. அவருக்கு வேண்டிய தொழில் சுதந்திரத்தைத்தான் பத்திரிகைச் சுதந்திரம் என்று வாய் வலிக்க உக்கிரமாய்ப் பேசுகிறார்கள். கூர்ந்து நோக்கினால் அது 'பத்திரிகைச் சுதந்திரம்' அல்ல என்று புலப்படும். பத்திரிகைத்தாளை வெள்ளையாகவே விற்றால் டன் கணக்கில் தினமும்விற்கமுடியாது; ஆகவே, அதைக் கறுப்பாக்க ஆள்படைகளும் யந்திர சாதனங்களும் வேண்டும். இந்த வசதிகளைக்கொண்டு கறுப்பாக்கிய தாளை நாள்தோறும் டன் டன்னாக விற்கலாம். இப்படி எண்ணும் பெரிய அதிபர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்குப் பத்திரிகையும் சரி, சணல் சாக்கும் சரி, உப்புப் புளி பருப்பு வெல்லமும் சரி, இண்டிரேஸும்சரி, ஷேர் மார்க்கட்டும் சரி இந்த எல்லா வியாபாரமும் ஒன்றே. பத்திரிகை உள்பட இந்தமாதிரி பலதுறைகளிலும் ஈடுபடும் தொழில் அதிபர்களுக்குப் பத்திரிகைபோன்ற சில துறை ஈடுபாடானது வருமானவரிக் கணக்குச் செப்பிடுவித்தைக்குக் கையடக்கமான ஒரு மாத்திரைக்கோலாக உதவுவதாகவும் ஓர் அபிப்பிராயம் உலவுகிறது. இவர்கள் தங்கள் நடவடிக்கைகளுக்கெல்லாம் ஏற்ற அநுகுணமான அரசியலிலோ பொருளாதாரத்திலோ சமூகத்திலோ தக்க செல்வாக்கை உண்டாக்கிக் கொள்ள விரும்புகிறார்கள். இதற்கும் தங்கள் பெருந்தொழிலான பத்திரிகையைப் பயன்படுத்துகிறார்கள். அந்தப் பத்திரிகைச் சுருதியில் ஐக்கியமாகிப் பேனாவாத்தியத்தை ஓட்டுகிற தொழிலாளிகளே இவர்களுக்கு அருமையான லாயக்கான பத்திரிகை எழுத்தாளர்கள். இந்தப் பெருந்தொழிலதிபர்கள் வேண்டும் பத்திரிகைச் சுதந்திரம் என்றுவது பத்திரிகை எழுத்தாளனின் மனச்சாட்சிக்கு இடம் கொடுக்கும் சுதந்திரம் ஆகுமா?

இந்த நிலையில் ஓர் எழுத்தாளர் தாமே ஒரு பத்திரிகை நடத்த முன் வருகிறார் என்றால், என் போன்றவர்களுக்கு அது நிச்சயம் மகிழ்ச்சியான ஒரு நிகழ்ச்சியே. இதனால் தான் புதிய புத்திரிகைகளை நாம் வரவேற்கிறோம்.

**— தீ. ஜ. ர. —**

பெரும் பணம் இல்லாமல் பத்திரிகைநடத்த முடியுமா? எழுத்தாளனுக்கு ஏட்டுச் சுரைக்காயை அல்லாமல் தொழில் நுணுக்கம் என்ன தெரியும்? மனச்சாட்சி, கத்தரிக்காய் என்றெல்லாம் பேசாமல் தந்திரமாய் நடந்துகொள்ளும் எழுத்தாளனைத் தவிர மற்றவனால் எல்லாம் எப்படி வெற்றி காணமுடியும்?— இந்த மாதிரியெல்லாம்பேசுவோர் இருக்கிறார்கள். மற்றவர்கள் மட்டும் அல்ல; எழுத்தாளர்களுக்குள்ளே கூடப் பலர் இப்படித்தான் பேசுகிறார்கள்; எண்ணுகிறார்கள்.

எழுத்தாளனென்றாலே 'கற்றறி மூடன்', 'உலகந் தெரியாதவன்' 'மனச்சாட்சி என்பதே தேவைப்படாதவன்' முடிவாக 'அவன் ஒரு கூலிக்காரன்' என்ற மாதிரியெல்லாம் கூறுவது சுத்தப் புரட்டு அல்லது மௌட்டிகம். உலகம்தெரியாமல் உலகத்தைப்பற்றி எவனாவது எழுத முடியுமா? லட்சியமும் கொள்கையும் இல்லாதவன் எழுதுவதிலே எப்படித்தெளிவோ காரண காரிய நியாயமோ இருக்க முடியும்? 'கூலிக்கு மாரடிக்கும்' தொழில் தானா எழுத்துத்துறை? எழுத்து வலிமையால் புத்தகமோ பத்திரிகையோ விற்பதில்லை; வியாபார பலத்தால் விற்கின்றன; பல தந்திரங்களால்இந்திரஜாலமாங்கன்று போல வளர்கின்றன என்பது போன்ற கருத்துஉரைப்போரும் உளர். 'களிமண் சட்டியை சாம்பிராணி என்று விற்பதே மகோன்னத வியாபார சாமர்த்தியம்' என்று கூறுவோரின் காலம் தானா இது? இது மாறவே மாறாதா இன்று எங்கள் நாட்டில்?

வியாபாரத்திலே நல்லதையும் விற்கலாம். கெட்டதையும் விற்கலாம். நல்லதைக் கொண்டு நல்ல பெயர் வாங்கி நிலைக்கமுடியாதா? கெட்டது கொண்டுதான் நிலைக்கமுடியுமோ? உண்மையில் கெட்டது ஒருபோதும் நீடித்து நிலைக்காது. ஆனால் ஒவ்வோர் அறுவடைக்குப்பின்னும் புதுப் புது மாற்றுப்பயிர் ரொட்டேஷன் க்ராப் செய்து வருகிறார்கள் சில சூரபத்மர்கள். தொழில், கட்சி, கருத்து, சரக்கு இப்படிப்பல துறைகளிலும் மாற்றுப்பயிர் விவசாயம்!

நல்ல எழுத்துக்கும் பின்பலம் வியாபார நுணுக்கமும் பணவசதியுந்தான். ஆனால் நல்ல எழுத்து வலுவானதாக இருந்தால் பெரிய பின்பலம் தேவையில்லை. சொற்பப் பின்பலம் இருந்தாலேபோதும் பெரும் பின்பலம் இல்லாமல் நல்ல எழுத்து இன்று வளர்ந்து முன்னேறும்பாதை மிகக் கடினமானது. நீண்டு நெடிது செல்வதுதான். அதற்குத் தேவையான உள்வலிவும் ஊக்கமும் பெரும் தொழில் அதிபர்களுக்கு இராமல் போகலாம். சாதாரண எழுத்தாளனுக்கு அது உண்டு. பணத்திலே பேராசையில்லாமல், அலங்கார ஆர்ப்பாட்டங்கள் செய்யாமல், நாணயமான தன் எழுத்துப் பலத்தையே முதன்மையாகக்கொண்டு, ஏதோ சொற்ப வசதியோடு எழுத்தாளன் ஒரு பத்திரிகையைத் தொடங்கி வெற்றிகாண

(5ம் பக்கம் பார்க்க)

## பைந்தமிழ்ப் பூங்கா

## 15

# அகத்திணை மரபும் வைதீக சமயமும்

**செல்வி க. பூரணம்**

சமயப் பூசல்களும் போட்டிகளும் பெருகி ஒன்றோடு ஒன்று மோதித் தாக்கிக் கொண்டிருந்த போது சமயக் குரவர்கள் தமிழகத்தில் தோன்றினர். சோழ நாட்டை ஆட்சிசெய்த மகேந்திரவர்மன் ஆரம்பத்தில் சமண மதத்தினனாக இருந்து அப்பரின் அற்புத நிகழ்ச்சிகள் காரணமாக சைவசமயத்தைச் சார்ந்தான். பாண்டிய நாட்டில் செங்கோல் செலுத்தி நின்ற சீர் நெடுமாறன் சம்பந்தரின்உதவியால் சைவனானான்.

அப்பர் சம்பந்தர் கால ஆரம்பம் சமண வளர்ச்சிக் காலமாகவும் பிற்பகுதியில் அம்மதத்தின் தேய்வுகாலமாகவும் இருப்பதை தமிழ் நாட்டு வரலாறு மூலமும் இவர்களது வரலாறுகள் வாயிலாகவும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

நாவுக்கரசர் காலத்திலும் அதன்பின்பும் ஆட்சிசெலுத்திய பல்லவ மன்னர் காலத்தில் தமிழோடுஇசையும் நடனமும் ஓவியமும், கட்டிடக் கலையும் வளர்ச்சியடைந்து சிறப்புற்றன.

பல்லவமன்னர்கள் இசையில் வல்லுநர்களாக விளங்கினர். மகேந்திரவர்மன் இசை நங்கையோடு நெருங்கிய தொடர்புடையவனாகக் காணப்படுகிறான். இவன் 'சங்கீத' என்றபட்டத்தையும் பெற்றிருந்தான். நாவுக்கரசர், சம்பந்தர் முதலிய இச்சைவப் பெரியார்களும் அரிய தேனினும் இனிய தேவாரப் பதிகங்கள் மூலம் இசையை வளர்த்தனர். சம்பந்தர் பாடும் பாடல்களை திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழில் வாசித்து அப்பாடல்களுக்கு மேலும் மெருகூட்டி உடன் வாழ்ந்து இசை வளர்த்து வந்தார். அப்பர் ''ஈசன் எந்தை இணையடி நிழல் மாசில்லாத வீணை போன்றது'' என்று கூறி மகிழ்கிறார். இவ்விருவருடன் சுந்தரரும் இசை வளர்த்து இசை வளர்ச்சியில் மூவர் ஆனார்கள். சைவசமய வளர்ச்சிக்கு இசையும் உறுதுணையாக இருந்தது.

கோவில்களில் இசை வெள்ளம் கரைபுரண்டோடியது. கோவில்களில் ஆடவரும் மகளிரும் இசை பாடினர். ஆழ்வார்களின் அருட்பாசுரங்கள் இசையோடு துதிக்கப்பட்டன. சமயகுரவர் காலத்தில் ஏற்பட்ட நடன வளர்ச்சியை சித்தன்ன வாசல் குகைமூலம் இன்றும் நாம் காணலாம். பல்லவர் காலத்தில் ஏனைய கலைகளைப் போல ஓவியமும் வளர்ந்திருந்தது. சித்தன்னவாசலில் காணப்படும் ஓவியங்கள் பல்லவகால மக்கள் அணிந்த அணிவகைகள், கூந்தல் ஒப்பனை, ஆடை வகைகள் நடனக் கலையின் நுட்பங்கள் ஆகியவற்றைச் சித்தரிக்கின்றன.

பல்லவர் காலத்திற்கு முன்பே கோவில்கள் அமைப்பதில் தமிழர் தேர்ச்சியடைந்திருந்தனர். பல்லவ காலக் கோவில்கள் வனப்புடையனவாக அமைக்கப்பட்டன. மகேந்திரவர்மன் காலத்திலும் அதற்குப் பின்பும் பல்லவன் ஈச்சுரம், மகேந்திரப் பள்ளிவர்த்த மானிச்சுரம் ஆகிய கோவில்கள் எழுந்தன. பல்லவர்கள் வரும்போது அந்நியர்களாக வந்து தமிழ்நாட்டுப் பண்பாடு கலாச்சாரம் அவர்களைக் கவர அவர்கள் சைவர்களாக மாறினர். பல்லவமன்னர்களைச் சைவசமயத்தினராக்கிய பெருமை சமயகுரவர்க்கே யுரியதாகும்.

பல்லவர் காலத்திலும் அதற்குப் பின்பும் வாழ்ந்த சமயகுரவர்களினதும் ஆழ்வார்களினதும் தமிழ்அருட்பாக்கள் தமிழ் இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. சங்ககாலத்து இலக்கிய அகப்புறப்பாக்கள் மனிதவாழ்க்கையைச் சித்தரித்தன. தேவாரங்கள் அருட்பாக்கள் தெய்வ வாழ்க்கையைச் சித்தரிக்கின்றன. சங்ககாலச் செய்யுட்கள் இல்லறத்தில் ஈடுபட்ட தலைவன் தலைவியர் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டின. ஆழ்வார் நாயன்மார்கள் இறைவனைத் தலைவனாகவும் தங்களைத் தலைவியராகவும் பாவித்து அருட்பாக்களை பாடியுள்ளனர். சங்க இலக்கியங்கள் கலிப்பா ஆசிரியப்பாவால் ஆக்கப்பட்டன. ஆனால் தேவார - அருட்பாசுரங்கள் ஆசிரியவிருத்தம் கலிவிருத்தங்களால் எளிய இனிய இசையோடு கூடிய சொற்களால் ஆக்கப்பட்டன. சங்க இலக்கியங்களின் சாறு இத்தேவார திருவாசகங்களில் காணப்படுகிறது. இவ்அருட்பாக்கள் தமிழ் இலக்கியங்களுக்குத் தனிச்சிறப்பை அளித்ததால் பின்வந்தோரும் அந்நடையைப் பின்பற்றினர்.

சமயகுரவர்கள் நால்வர்களை வரிசைப்படுத்தும் போது சம்பந்தர், அப்பர், சுந்தரர் மாணிக்கர் என சரித்திர ஆசிரியர்கள் வரிசைப்படுத்துகின்றனர். மணிவாசகப் பெருமானை மறைமலையடிகள், சுப்பிரமணியம்பிள்ளை ஆகியோர் நால்வர்க்கும் முதலில் வைத்து தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டவர் மாணிக்கவாசகர் எனப் பல சான்றுகளுடன் நிறுவியுள்ளனர். மணிவாசகப்பெருமானை தேவார ஆசிரியர்களுக்கு பிற்பட்டவர் என சீனிவாச ஐயங்கார் கனகசபைப்பிள்ளை, கோபிநாதராயர், சதாசிவப்பண்டாரத்தார் ஆகியோர் பல சான்றுகளுடன் நிறுவியுள்ளனர். நாம் கால ஆராய்ச்சியில் ஈடுபடாது எக்காலத்துக்கும் பேரின்பம் பயக்கும் திருவாசக திருக்கோவை ஆகியவற்றின் சிறப்பை நாம் காணுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆனி மீ 13உ. (27-6-65)

# தோசை, வடை, இட்லி

கொழும்புக்குச் சென்று திரும்பிய ஓர் அன்பர், அங்கு தமிழ்த்துவேஷம் மிகவும் அதிகரித்துள்ளதாயும், தமிழரைக்கண்டால் "தோசை, வடை" என்று கேலி செய்வதாகவும் மிகக்கவலையுடனும் வேதனையுடனும் சொன்னார்.

சென்னைக்கு வந்திருந்த இந்திய தகவல் மந்திரி இந்திராகாந்தி (நேருஜியின் புதல்வி) டில்லி மீது இட்டலியும் தோசையும் படையெடுத்து, அநேகமாக எல்லாவீடுகளின் அடுப்பங்கரையை ஆக்கிரமித்து விட்டதாகவும் காஞ்சிபுரம் புடவைகளும் அப்படித்தான் என்றும் தமிழகத்திலிருந்து அதிகமான புத்திசாலிகள் அங்கு "இறக்குமதி"யாகி முக்கிய நிர்வாகப் பதவிகள் வகித்து, ஆட்சியை நடத்துவதாகவும் ஒரு [illegible] பொதுக் கூட்டத்தில் கூறியபோது, தமிழ் மக்கள் சிரித்து கரகோஷம் செய்து, தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

ரயிலில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும்போது, மதவாச்சி, அனுராதபுரம், மாகோ, குருநாக்கல், பொல்காவலை முதலிய பல ஸ்டேஷன்களிலும் "வடை, வடை, வடை" என்று வடையின் "திருநாமம்" உச்சரிக்கப்படுவதையும், தமிழரல்லாதார் அதை ஆவலுடன் வாங்கிச் சாப்பிட்டுப் பசி ஆறுவதையும் பார்க்கின்றோம். வடை வியாபாரம் செய்பவரும் அவர்களே.

கொழும்பிலே பல சைவ ஒட்டல்களிலும் சிங்கள அன்பர்கள் வந்து, ருசியான தோசையும் சாம்பாரும் சாப்பிடுவது சர்வ சகஜம். சைவக்கடைகளுக்கு அவர்கள் அதிகமாக வருவதற்குக் காரணம், அங்கு பலகாரங்கள் ருசியாகவும் சுத்தமாகவும் மலிவாகவும் இருப்பதாயும், வேறுகடைகளில் ஒரு ரூபாய்க்கும் பசியாற முடியாதபோது சைவக் கடைகளில், அதில் பாதி செலவழித்தால் வயிறு நிறைந்துவிடுமென்றும் அவர்களில் பலர் கூறுவதைக் கேட்கலாம்.

தமிழகத்திலே பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், பல வருடங்களுக்கு முன் "சுயமரியாதை" இயக்கம் நடத்தினார் ஊருக்கு ஊர் "பிராமணாள் காப்பி கிளப்புகள்" இருக்கும். அங்கு பிராமணரல்லாதார் சென்று சாப்பிடக்கூடாதென்று பலத்த பிரசாரம் செய்தார். புதிய ஓட்டல்களும் பல ஊர்களில் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் 'பிராமண கிளப்'புக்குப் போகக்கூடாதென்று பிரசாரம் செய்தவர்களே நாளாவட்டத்தில் அங்குமெதுவாக வந்து காப்பி பலகாரம் சாப்பிட்டனர். புதிய ஓட்டல்கள் ஒரு சில மாதங்களில் மறைந்துவிட்டன.

இதையெல்லாம் இங்கு எழுதக்காரணம் உண்டு. "வடை, தோசை" என்ற புதிய செல்லப்பெயர்களால், நம்மை இப்போது சிலர் அழைப்பதைப் பற்றி நம்மில்யாரும் கலவரப்படத்தேவையில்லை.

இந்த "செல்லப் பெயர்கள்" காலத்துக்குக காலம் மாறிவந்துள்ளதைப் பலரும் அறிவோம். பல ஆண்டுகளுக்கு முன் "பனங்கொட்டை", என்றும் "பருப்பு" என்றும் தமிழரை அழைத்தனர். சமீபகாலத்தில் அது "கள்ளத்தோணி" யென்றாகி இப்போது "வடை, தோசையாக" மாறியுள்ளது. இதில் "முற்போக்கை"ககாணலாம். இதுவும் சில காலத்தில் மாறி மறைந்துவிடக்கூடும்.

சுமார் பத்துவருட காலமாக ஆட்சியிலே தமிழருக்கு இடமே இல்லாமலிருந்தது. தென்னிலங்கையில் தமிழர் இனி வாழவே முடியாதோ என்ற நிலையும் ஏற்பட்டது. அந்த சோகக்கதைகளை நம்மில் பலரும் மறந்துவிட்டோம். இப்போது தமிழரும் ஆட்சியிலே பங்குபற்றி புதிய நம்பிக்கையுடன் சற்றே தலைநிமிர்ந்து நடக்கக்கூடியதாகவுள்ளது. தமிழரின் உதவியையும் ஒத்துழைப்பையும் நாடி ஏமாற்றமடைந்த எதிர்க்கட்சியினர் தங்கள் உணர்ச்சியை இவ்வித "செல்லப்பெயர்கள்" மூலம் தெரிவிப்பதில் வியப்பில்லை.

இதற்குத் தமிழர் என்னசெய்யவேண்டுமென்பது முக்கிய கேள்வி. "இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்ற தமிழ்மறைக்கேற்ப, "வடை, தோசை" என்று சொல்லும் வாய்களுக்கு, அப்பலகாரங்களை விதவிதமாக அளிக்க ஒழுங்குசெய்யலாம்.

வடை, இட்லி, தோசை முதலிய பலகாரங்களில் ருசிருசியான எவ்வளவோ ரகம் உண்டு. தமிழகத்திலே முக்கியஓட்டல்களில் பார்த்தால் இது தெரியும். அவ்விதமான முதல்தர ஓட்டல்களை கொழும்பு முதலிய இடங்களில் ஆரம்பித்து, இப்பலகாரங்களை அன்பாகவும், மலிவாகவும், ருசியாகவும் அளிக்க ஒழுங்குசெய்வதுதான் நம்மை இந்த புதிய செல்லப்பெயரிட்டு அழைப்பவர்களுக்கு நாம் அளிக்கக்கூடிய சரியான பதிலாகுமல்லவா?

# சம்பந்தரும் முருகனும்

— சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தன் —

முருகன் யார்? முருகன் என்பதன் பொருள் யாது? அச்சொல் எதனை உணர்த்துகின்றது என்பனவற்றை யாம் சிறிது சிந்தித்தல் வேண்டும். முருகன் எனுஞ் சொல் கடவுட்டன்மை, இளமை, அழகு என்றின்னோரன்னவற்றைக் குறிப்பது? நக்கீரர் முருகனை "என்றும் இளையாய் அழகியாய்" என்று கூறுவது நினைக்கத்தக்கது. கடவுள், இறைவன், பரம்பொருள் என்பன. ஒரு பொருளை உணர்த்துவன. பரம்பொருளாகிய முருகன் பிறவாயாக்கைப் பெரியோன் என்பது யாவரும் உணர்ந்தது. முருகனின் முருகு பற்றிக் கந்தப்புராணம் உணர்த்துகின்றது. திருவவதாரப் படலத்தில் கச்சியப்பர்

"அருவமும் உருவமாகி
அநாதியாய்ப் பலவாய்
ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர்
மேனியாகிக்
கருணை கூர் முகங்களாறும்
கரங்கள் பன்னிரண்டும்
கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்
குதித்தனன் உலகமுய்ய"

என்று கூறுகின்றார். முருகன் பரம்பொருள் என்றுணர்த்த இதைவிடச் சான்றொன்றுண்டோ?

'ஆதியும் அந்தமும் இல்லாஅரும் பெருஞ்சோதி' யாகிய முருகன் ஊனமுள் யோனிவாய்ப்படுவானா? முருகன் பிறப்பிறப்பில்லாதவன் என்பதை அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்று கூறும்போது அவரே அதனைப் பிறழவொட்டி 'சம்பந்தர் என முருகன் வந்தான்' என்று திருப்புகழில் கூற ஒருப்படுவாரா? "ஆதலால் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும் பேதகமற்றோம்" என்று இறைவனால் அருளப்பட்ட முருகன் யோனிவாய்ப்படுவானா? இது இவ்வண்ணமாக முருகன் பகவதி வயிற்றில் பிறந்த ஞானசம்பந்தர் என்றோ முருகனே ஞானசம்பந்தராகப் பிறந்தார் என்றோ கூறுவது இறைமைத் தன்மையுணராமையன்றோ!

இனி திருஞான சம்பந்தர் இறைவன்போல் முற்றுணர்வும் பேராற்றலும் வினைத் தூய்மையும் என்றின்னோரன்ன இறைமைக் குணங்களுடையவரா என்று நாம் ஆராயவேண்டும். சம்பந்தர் சரிதத்தைச் சேக்கிழார் வாயிலாகப் பார்ப்பதே சிறப்புடைத்து. சேக்கிழார் சம்பந்தர் பிறப்புப்பற்றிக் கூறுமிடத்து

"காதலியார் மணி வயிற்றிலுருத்தெரிய" (சம்பந்தர் புராணம் 20)

"சிவபாத இருதயர் தாம் பெற்றெடுத்த வைதிக சூளா மணியை" (சம். புரா. 873)

என்னும் அடிகளால் அவர் யோனிவாய்ப்பட்டுப் பிறந்தமையைக் கூறுகின்றார். "தந்தையாரொடு தாயிலர்" என்ற சம்பந்தர் திருப்பாசுரவாக்கே எம்நாதர் பிறப்பிறப்பிலர் என்பதைக் காட்டவில்லையா?

சம்பந்தர் பகவதியார் வயிற்றில் உதித்தபின் மாற்றழித்துப் பிறவாதவர் என்பது

"கருவரை பிற்புகாதவர்" (சம். புரா. 185)

"ஒரு பிறப்பும் எய்தமையுடையார்" (சம். புரா. 264) என்னும் தொடர்களால் உணர்த்தப்படுவதைக்காணலாம்.

திருஞானசம்பந்தர் முற்பிறப்புடையவர் என்பதும், அப்பிறப்பில் நல்வினைப்பேற்றால் அதிதீவிர பக்குவமடைந்தவர் என்பதும், முற்பிறவியில் இறைவழிபாடுடையவர் என்பதும் அதுமுற்றுப்பெற வேண்டியும், தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் பேறு பெறவும் சண்பையிலே பிறந்தார் என்பதும் கீழ்வரும் அடிகளால் உணரக் கூடியது.

"பண்டு திருவடிமறவாப்
பாண்மையோர் தமைப்
பரமர்
மண்டு தவமறைக் குலத்
தோர் வழிபாட்டினளித்
தருளத்
தொண்டினிலை தரவரு
வார் தொடர்ந்த
பிரிவுணர் காற்
கொண்டெழலும் வெருக்
கொண்டாற் போலழு
வார் குறிப்பயலாய்"
(சம். புரா. 55)

"ஈசர் கழன்முறை புரிந்த
முன்னுணர்வு மூளவழத்
தொடங்கினார்" (சம். புரா. 61)

"தம்மேலைச் சார்பு
ணர்ந்தோ" (சம். புரா. 63)

"முன்னிலைமைத் திருத்
தொண்டு முன்னியவர்க்
கருள் புரிவான்"
(சம். புரா. 64)

"சுற்றமுறு பெரும்பாசத்
தொடர்ச்சிவிடு நிலைமை
யராய்ப் பெற்ற முயர்த்
தவரருண்முன் பெற்ற
திறல்"
(சம். புரா. 1157)

இருவினைப் பற்று நீங்கிச் சத்திநிபாதம் கைவரப் பெற்றுத் 'தாடலைபோற் கூடலை நாடும்' ஆன்மாவே சம்பந்தர் என்பதை

"இருவினையும் பற்றறுப்பார்", "தலைப்படுஞ் சார்பு நோக்கி"

"பவமறவென்னை முன்னா
ளாண்டவப் பண்பு கூட
நவமலர்ப் பாதங் கூட்டு
மென்னு நல்லுணர்வு
நல்க"

"நாதனே நல்லூர் மேவும்
பெருமண நம்பனேயுன்
பாதமெய்ந் நீழல் சேரும்
பருவமீதென்றுபாட"

"போதநிலை முடிந்தவழி
புக் கொன்றியுடனானார்"

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

'கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரனாய் மாலயன் தனக்கும்மேனைவானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்திபோல்' சம்பந்தர் முற்றுணர்வினர் அல்லர். 'ஆரணமுலகேழு மீன்றருளியனைத்தினுக்குங் காரணமாய் வளம்பெருகு கருணை திருவடிவான சீரணங்கு எண்ணரிய சிவஞானத்தின்னமுதங் குழைத்துக் கொடுத்த' பின்பே ஆளுடையபிள்ளை யாராய்த் தெரிவரிய தாவில் தனிச் சிவஞான சம்பந்தராயினார். ஞானப்பால் கொடுத்தபின் பெற்ற ஞானங்கள் எவை என்பதைச் சேக்கிழார் பின்வரும் பாடலில்கூறுகின்றார்;

"சிவனடியே சிந்திக்கும்
திருபெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும்
பாங்கினில் ஓங்கிய
ஞானம்
உவமையிலாக் கலைஞான
முணர்வரிய மெஞ்
ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாமுணர்ந்தாரந்
நிலையில்

இவ்வாறாக நம்மைப் 'பேதித்துவளர்த்தெடுக்கும் பெய்வளை தன் போதமுலை' சுரந்தளித்த பின்பே பல்வேறு ஞானங்களையும் உணர்ந்த சம்பந்தரா அறிவொன்றற நின்றறி வாரறிவிற் பிறிவொன்றற நின்ற பிரானாகிய முருகன்?

தக்கயாகப் பரணியில் ஒட்டக் கூத்தர் தம் கற்பனையை அளவுக்கு மீறிச் செலுத்திச் சம்பந்தர் முருகனே என்று கூறுவது உண்மைவரலாற்றிற்கு ஒவ்வாதது. மேலும் சம்பந்தர் தமது தேவாரப்பாடலில் "எனதுரை தனதுரையாக" என்று கூறுவது, இறைவன் தன் பேரொளிப்பிழம்பு சம்பந்தர் மூலமாக உலகிற் பரவுவதைக் குறித்துப் பாடியுள்ளாரேதவிர 'விரிசடைக் கடவுளின் பேரொளிக் கண்ணின் பொறிச்சுடர் யானே' என்று குறிப்பிடவில்லை.

அருணகிரிநாதர் "சம்பந்தர் எனத் தமிழ் தேக்கிய பெருமானே" என்று கூறுவது யாது காரணம் பற்றியதோ எனிற் கூறுதும். முருகன் முத்தமிழ்த் தெய்வம். சங்கத்தமிழ் வளர்த்தோன் என்பது நம் பண்டைத் தமிழறிஞர் கொள்கை. ஞானசம்பந்தர் தம்மை 'முத்தமிழ்வல்ல ஞான சம்பந்தனெ'ன்றும், 'தமிழ்விரகன்' என்றும் 'நற்றமிழ்க்கு இன்துணை' என்றும் கூறுவதைக்காணலாம். சம்பந்தரின் பாடல்கள் தமிழிற்கு அணி செய்வன. அவர் பாடலில் தமிழ் கொஞ்சுகின்றது. முத்தமிழும் அவர் பாடலில் முன்னிற்கின்றது. எனவே சம்பந்தர் தமிழ்க்காவலர். தமிழ், சைவம் இரண்டையும் வளர்த்தவர் சம்பந்தர். தேரரும் அமணரும் அழிக்காது தமிழைத் தேக்கிக் காத்தவர் சம்பந்தர். இந்நினைவு அருணகிரிநாதருக்கு முருகன் முன்வருகின்றது. எனவே எல்லோர்க்கும் தெரிந்த சரிதத்தைக் கொண்டு முருகன் தமிழை, சைவத்தைக் காப்பதைச் சொல்கின்றார்.

சம்பந்தர் இரண்டினையும் காத்ததுபோல் - தேக்கியதுபோல் முருகனும் உளன் என்பதே அருணகிரி அருள்வாக்கின் பொருளாகும். மற்று முருகனே சம்பந்தர் எனக் கூறுவதல்ல அவர் பாடல்.

இதுகாறும் கூறியவற்றால் திருஞானசம்பந்தர் சண்பையில் யோனிவாய்ப்பட்டவர் என்பதும், அவர் தம் ஆன்மா முற்பிறப்பில் இருவினைப்பட்டு இறைவழிபாடியற்றி மலபரிபாகப்பட்டு சத்திநிபாதம் அடைந்து திருவடி சேரும் பக்குவத்தில் இருந்ததென்பதும் ஞானப்பால் உண்பதற்கு முன் முற்றுணர்வில்லாதவர் என்பதும் திருவடி நீழலடையும் பேற்றுக் காலம்வரத் தாடலைபோற் கூடி இரண்டறக் கலந்தார் என்பதும் பெறப்படுகின்றன. ஆதலால் அவரை முழுமுதற் கடவுளாகிய முருகனெனக் கூறுவது ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்க்குகந்ததல்லவென்பது தெற்றெனத் தெளிகின்றது. இருபேர்க்கும் தனித்தனி இடம் உண்டு. அதை அறிந்து வணங்குவது நம் கடன்.

## வள்ளுவர்போற்றும் மனிதப்பண்பு

13-6-65 ஞாயிறு இதழில் வெளியான 'வள்ளுவர் போற்றும் மனிதப் பண்பு' என்ற கட்டுரையை எழுதியவர் பெயர் 'ஆ. தேவராசன்' என்றிருக்க வேண்டும். மேற்படி கட்டுரையில் கட்டுரையாளரின் பெயர் தவறுதலாக விடுபட்டுப் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச்சாட்சியே பார்த்தன் மதியே கண்ணன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என்பதில்லை. வீட்டை அலங்கரித்து நிறைந்க வைக்கோல்போரா தேவை? ஒரு சிறு தீபம் போதாதா? சில சாமான்ய நுணுக்கங்கள் தெரியாமல் கையைச்சுட்டுக் கொண்ட எழுத்தாளர்களின் அனுபவம் சரியான உதாரணம் அல்ல. பெரும் தொழிலதிபர்களின் பத்திரிகைகளை அலங்கரிக்கும் பட்டாடோபப் பின்னணிகளோடுசாதாரண எழுத்தாளர்களின் பத்திரிகை போட்டி போடத் தேவையே இல்லை.

வெளிப்படையாய்ச் சொல்லுகிறேனே; எழுத்திலே இலக்கிய நயமும் தெளிவும் விறுவிறுப்பும் வலிமையும் அந்தரங்க சுத்தியும் வேண்டும். இதுவே முதலாவது தேவை. அட்டை பளிச்சென்று இருக்க வேண்டும்; அழகாய் இருக்கவேண்டும் என்றுல் ஆபாசப்படமே அவசியம் என்பதில்லை. கலர் பார்டரும் தெளிந்த பொருளடக்க எழுத்துக்களுமே ஏற்றமுறையில் அமைந்திருந்தால் கூட அட்டை கவர்ச்சியாயிருக்க முடியும். உள்ளே எங்கேபார்த்தாலும் பெரிய பெரிய சித்திரங்கள் அவசியமில்லை. சொற்பச் செலவில் சிறு சிறு படங்களை அங்கங்கே கண் குளிர அழகாக இடையிட்டு வைத்தாலே மனங்களிப்புறச் செய்யலாம். அச்செழுத்து மிகத் தெளிவாயிருக்கவேண்டும்; உடைசலேயிருக்கக்கூடாது. தாள் நன்ருயிருக்க வேண்டும். இந்தமாதிரி சில அம்சங்களில் நல்ல கவனம் எடுத்துக் கொண்டால் எழுத்தே வலுவாய்க்கொண்ட எழுத்தாளனின் பத்திரிகை வெற்றி பெருமல் போகாது.

முடிவாக, இன்னென்று; அப்படி எழுதினல் விற்குமோ இப்படி எழுதினல் விற்குமோ? அவன் மாதிரி எழுதவேண்டுமோ, இவன் மாதிரி எழுதவேண்டுமோ? அந்த விஷயம் போடவேண்டுமோ, இந்த விஷயம் போடவேண்டுமோ - என்று இந்த விதமெல்லாம் நினைத்து, 'கிழவனும் அவன் மகனும் கழுதையும்' கதை போல நடந்துகொள்வது முற்றும் தவறு. தன் சக்திக்கு இயன்ற நிலையில் தன் மனத்துக்குச் சிறப்பாய்த் தோன்றுகிற அம்சங்களுள் தன்னால் இயன்றவற்றை இட்டுப் பத்திரிகை நடத்துவதே நல்லது. ஒருவன் இன்னெருவன் மாதிரி எழுதவாவது? ஒருவன் இன்னெருவன் மாதிரி செய்யவாவது? ஒருவன் இன்னெருவனுக மாற எண்ணுவது போன்ற அப்பாவித்தனமாகவே இது முடியும்.

அமெரிக்க 'ரீடஸ் டைஜஸ்ட்' பத்திரிகையின் அதிபரை யாரோ ஒரு கேள்வி கேட்டார். ''உலகிலே உங்கள் பத்திரிகை கோடிக்கணக்கான பிரதிகள் விற்கிறதே, அதன் சூட்சுமம் என்ன? உங்கள் மேதையின் ரஹஸ்யம் எது?''

'டைஜஸ்'டின் அதிபர் சொன்னர்

''நான் ஒரு சாதாரண சராசரி (Average) மனிதன். இதுவே என் 'மேதையின்' ரஹஸ்யம்''

''புதிராயிருக்கிறதே உங்கள் பதில்! சற்றுவிளக்குவீர்களா?''

''புதிர் ஒன்றுமில்லை. நான் சராசரி மனிதன். என் மனத்துக்குப் பிடித்தமான நல்லதென்று தோன்றும் விஷயங்களையே நான் வெளியிடுகிறேன். உலகிலே என்மாதிரி சராசரி மனிதர்கள் தாம் மிக ஏராளமானபேர். எனக்குப் பிடித்தவையெல்லாம் அவர்களுக்கும் பிடிக்கின்றன. இதுதான் டைஜஸ்ட் வெற்றியின் ரஹஸ்யம்''

பத்திரிகை தொடங்கும் எந்த எழுத்தாளனும் சராசரி மனிதனுகத்தான் இருக்கவேண்டும் என்பதற்கு உதாரணமாக இதைநான் சொல்லவில்லை. சராசரி மனிதனுக்கு மேல் தரத்திலோ கீழ்த்தரத்திலோ உள்ள எழுத்தாளனும் பத்திரிகை நடத்தலாம். அதில் ஏற்ற வெற்றியும் காணலாம். எந்தத் தரத்திலுள்ள எழுத்தாளனுக்கும் பிரதிபலிப்பான சுவை படைத்த பல வாசகர்கள் அந்தத்தரத்தில் இருப்பார்கள். அவர்கள் போதிய எண்ணிக்கையும் இருப்பார்கள். கோடிக்கணக்கான மக்களுள் ஆயிரக்கணக்கானவராவது அப்படியிருக்க மாட்டார்களா? ஆயிரக்கணக்கான அவர்களை எட்டிவிட்டாலே நமக்குவெற்றிகிட்டுவது நிச்சயம். எனவே, சுய இயல்பை மாற்றிக் கொள்ள முயலாமல் யாரையும் எதையும் நகலடிக்க எண்ணுமல் தனக்கும் பிடித்ததைத் தனக்குப் பிடித்த முறையில் தயாரித்துப் பத்திரிகை நடத்திஞல் யாருக்கும் நிச்சயமாகத் தோல்வி வரவே வராது.

தைரியம்வேண்டும். சுயபலத்தைப் பூர்ணமாய் நம்பவேண்டும். எப்பொருள் யார் வாய்க்கேட்பினும், எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணும் முயற்சி வேண்டும். ஆய்ந்த சுய முடிவு வேண்டும். அதுவே திடசங்கல்பமாய்க் கொண்டு சலியாமல் செயலாற்றவேண்டும். மனச்சாட்சியே பார்த்தன்; மதியே கண்ணன். எங்கே யோகேசுவரனை கண்ணன் இருக்கிருனே, எங்கே தனுத்தரனை பார்த்தன் இருக்கிருனே அங்கே வெற்றியும் செல்வமும் இன்பமும் தானுகவே வந்து நிறையும்.

—'தீபம்' வைகாசி இதழ்.

# உங்கள் இராசி பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தொழில்வெற்றி, நண்பர்-பெரியோர் சேர்க்கை, குடும்பசுகம், பணவரவு, வாகனச்சிறப்பு, உத்தியோகச்சிறப்பு, கமத்தொழில் நன்மை, வர்த்தகச்சிறப்பு, பெண்களுக்கு பணவரவு, சுபகருமக் கொண்டாட்டம் நண்பர் சேர்க்கை, கலை வளர்ச்சி ஆதியனஉண்டாம்.

**துலா இராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் செய்தொழில் வெற்றி, மதிப்புணர்ச்சி, குடும்ப சுகம், பிணைப்போவதால் பின் கஷ்டம், உத்தியோகத்துறையில் அவதானம், ஊழியரால் கஷ்டம், கமத்தொழில் - கல்வித்துறை வர்த்தகம், மத்திம பவிதம், பெண்களுக்கு பணவரவு, தேகாரோக்கியக் குறைவு, இனபத்துக்கள் சேர்க்கை, சுபகரும முயற்சிகள் ஆரம்பித்தல் ஆகியன உண்டாம்.

**விருச்சிக இராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் நல்ல நண்பர் சேர்க்கையால் பொருள் சேரல், செய்தொழில்மூலம் பணவருவாய் அதிகரித்தல், சமூகத்தில் மதிப்புணர்ச்சி, உத்தியோகத்துறையில் அதிகாரிகளால் தொல்லைவிழைதல், பணியாளர் உதவி, கமத்தொழிலில்மத்திம பலிதம், வர்த்தகத்துறை மத்திம பலிதம், பெண்களுக்கு ஏமாற்றம், பண விரயம், மதிப்பிழப்பு ஆதியன உண்டாம்.

**தனு இராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் செய்தொழில் கஷ்டம், பணமுடை, இனபந்துக்களிடையே எதிர்ப்புக்கள், சுபகருமமுயற்சிகள் தடைப்படல், குடும்ப வெறுப்பு, தேகநலம் கெடுதல், கமம்-வர்த்தகம்-கல்வி உத்தியோகத்துறைகளில் பலவிதக்கஷ்டங்களும் போட்டிகளும் விரயங்களும் ஏற்படல், பெண்களுக்கு ரோகபீடை, ஏமாற்றம், குடும்பக்கஷ்டம் ஆதியன உண்டாம்.

**மகர இராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் எதிலும் மத்திம பலன்களே காணப்படுகின்றன. முயற்சிகள் தடைப்படல், பணமுடை, ஏமாற்றம், நம்பிமோசமடைதல், கமத்தொழில் மத்திம பலிதம், உத்தியோகத்துறையில் மேலதிகாரிகள் கஷ்டம் தருதல், வெறுப்புண்டாதல், வர்த்தகத்துறையில் பங்காளரால் கஷ்டம், கொடுத்த பொருள் திரும்பாமை, பெண்களுக்கு காதல் வெற்றி, பணவிரயம், மாதுருவழி உதவி ஆதியன காணப்படுகின்றன.

**கும்பராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் செய்தொழில் மத்திம பலிதம் தருதல், குடும்பத்தில் மத்திம சுகம், காதல் விவகாரம் பிரச்னை தருதல், செலவு அதிகரித்தல், கல்வித்தடை, உத்தியோகத்தருக்கு அதிகாரிகள் உதவிகிட்டல், கமத்தொழில் மத்திம பலிதம், வர்த்தகம் சிறப்பாக நடக்குமாயினும் பொருள் வரவு குறைதல், பெண்களுக்கு குடும்ப சுகமுண்டாயினும் ஆண்களால் ஏமாற்றம், பணமுடை, சுபகருமப்பேச்சுக்கள் தடைப்டல் ஆதியன உண்டாம்.

**மீன ராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கஷ்டபலன்களே நடக்க இடமுண்டாகையால் தெய்வ வழிபாடுகள் நன்மை தரும். இனபந்துக்களால் கஷ்டம், எதிரிகளால் துயர் விழைதல், பணமுடை, தேகநலக்குறைவு, கமத்தொழில்-வர்த்தகம் பலன்குறைதல், உத்தியோகத்துறையில் எதிர்பாராத தொல்லைகள்-அதிகாரிகள் பராமுகம், பெண்களுக்கு தேகநலம் குன்றல், ஆண்களால் ஏமாற்றம், பணமுடை, குழந்தைப்பேறு கிட்டல் ஆதியன உண்டாம்.

# வரப்பெற்ருேம்

**பாரதி**

தமிழ் எழுத்தாளர் சங்க மாத இதழ். ஆசிரியர்: அழ. வள்ளியப்பா.

○

**ஈழம் தந்த இன் கலைச் செல்வன்**

வெளியீடு: திருநெல்வேலி ஆறுமுகசிற்பாலயம். சிற்பாசாரியார் வி. ஆறுமுகம் அவர்களின் முதலாம் வருட நினைவுமலர்.

○

**மாலா நீ என்னை**

**மறந்து விடு**

(சிறுகதைத் தொகுதி) ஆசிரியர்: சீ. சிவஞானசுந்தரம், விலை சதம் 65.

○

**சுகாதார ஒலி**

(திங்கள் இதழ்) மக்கள் சுகாதார வாரமலர் 1965. யாழ்ப்பாண மாநகரசபைச் [illegible] வெளியீடு. ஆசிரியர்: மு. சண்முகநாதன்.

**கவிமலர்கள்**

## எட்டாதிரு!

— நீலாவணன் —

உன்னையே நானுய் உருவகித்து
ஊரிலுளார் கண்ணில் தெரியாமல்,
கண்ணீர் சொரிந்ததெலாம்
பெண்ணே! அறிந்தனையோ?
பேராச் சரியமிதே!
என்னையே நீயாக,
எப்பொழுதோ உன் ள்ளில்
கற்பனைகள் பண்ணிக்
களவாய் மகிழ்ந்தாயா?
உற்பவித்த இல்லில்
ஒளியேற்றி... அவ்வொளியில்
நிற்கையில்—உன் கண்ணில்
நெளியும் சுபசகுனம் அற்புதந்தான்!
வாழ்வோர் அதிசயந்தான்!
அப்படியே...
எட்டாத ஒன்ருய் இரு.

★

## வாழ்வதற்கு வழி காட்டும்

— மக்கள் தாசன் —

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும் என்று
சொல்லால் அணிசெய்து சொல்லிவைத்த விக்குறளை
கல்லாமலே பலபேர், கற்றுணந்தார் தாமென்று

சொல்லாமலே சொல்லிச் சுவையை உணராமல்
எல்லா வுயிர்க்கும் எங்கையா கைகளுண்டு?
எல்லாமே பொய்யையா; இதிலேதும் உண்மையில்லை
கொல்லாமல் வாழ்வேது குரைக்காமல்இருமென்பார்

இக்குறளின் பொருளும் இதற்கு முன்னுரைத்த
அக்குறளின் திறமும் ஆய்ந்துணர்ந்து நோக்கின்
எக்கருத்தும் உண்மையென எவர்க்கும் நனிதுலங்கும்
இக்காசினி தன்னில், இவைமேலோர்க்காயுரைத்தார்

பொய்யல்லப் புழுகல்லப் புத்தியாய்ச்
சொன்னவுண்மை
வையத்து மானிடர்கள் வாழ்வதற்கு வழிகாட்டும்
கைலாசம் எனக்கொள்ளக் கருவூலமாய் விளங்கும்
தெய்வத் திருமறையாம் திருக்குறளைப்
போற்றுவமே

★

## வான்முகில்வளாது பெய்க!

—சர்வானந்தன்

ஓலைக்குடிசையின் ஓட்டைப் பெருவழி
ஒழுகித் தரையூறி
சாலைப்பெருவழி சாடித்தெருவழி
சாரும் புதுவெள்ளம்
காலைப் பொழுதொடு மாலைப்பொழுதெனும்
காலத் தொடராக
மூலைக் குடிசையில் மூழ்கித் தவித்திட
மோதிப் பொழிசெய்யும்.

மேழிப் பெருவழி வாழ்வைத் தமதுடை
ஏழைக்குடில் உழவர்
நாளைக்(கு) உழவொடு நாற்றுப்பயிரிட
நன்றே மழை பெய்க;
ஏழைக்குலமினில் என்றும் துணைசெ(ய்)யும்
இன்ப மழை நின்று
வேளைக்கொருமுறை வீறுற்றெருரு பெரு
வேகம் தனில் பெய்க.

காகக் குருவிகள் கத்திப்பறை செய்ய
காராநிரை சோர
மேகப் பெருவழி மேவிக்கருமுகில்
மிக்க மழை பெய்யும்
வேகந்தனிலெறி மின்னல் இடியொடு
மேலும் மழைபெய்க
சோ! என்றிரைசெய்(து) சீதக்குளிர்மழை
சிறக்கப் பொழிசெய்க.

தொய்யில் முலைநிறை தோகைக் குமரிகள்
துணைவன்தனை நாட
வையத்(து) உழவர்கள் வாழ்க்கைத்திடலெனும்
வயலில் உளம் நாட
மெய்யில் குளிரது மீறிக் கடகட
என்னச்சுதியாட
பெய்யும் மழையது பெருகித் தரணியில்
பொலிவுக்(கு) எழில்சூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா

குட்டிக் கதை

## ஏழைகளுக்கு இலவசம்!

கண்ணனின் கண்களை நன்ருகப் பரிசோதனை செய்த அந்தப் பிரபல கண்பரிசோதகர் அவனிடம் ஒருசீட்டை எழுதி நீட்டியவாறு "இந்தக் கண்ணுடியை வாங்கி அணிந்துகொள். எனது பரிசோதனைச் செலவாக ஐந்து ரூபா கொடும்" என்ருர்.

திகைத்துப் போன கண்ணன், "ஏழைகளுக்குஇலவசமாக பரிசோதனை செய்யப்படும் என்று விளம்பரம் செய்திருந்தீர்களே! நானும் ஓர் ஏழைதான். எனது மாதவருமானம் ஆக நூற்றி ஐம்பது ரூபாதான். இந்த இலட்சணத்தில் எனக்கு மனைவியும் மூன்றுகுழந்தைகளும் கூட இருக்கிருர்கள். நான் உழைப்பது அத்தியாவசியச் செலவுகளைச் சரிக்கட்டவே கையும் கணக்குமாகச் சரியாயிருக்கிறது. எனவே நான் உண்மையில் ஓர் ஏழைதான் டாக்டர்" என்ருன்.

"ஏழைகளுக்கு இலவசம் என்று நான் விளம்பரம் செய்தேன் என்று உனக்கு யார் சொன்ஞர்கள்?"

"சொன்னதாவது! நானே நேரில் கண்டேன். தியேட்டரில் விளம்பரம்காட்டினுர்கள். உண்மையாகத்தான் சொல்லுகிறேன் டாக்டர். நான் ஒரு தடவையல்ல பல தடவைகள் அந்த விளம்பரத்தைக் கவனித்திருக்கிறேன்."

"தியேட்டரிலா...?" என்று கண்டிப்பவர்போல் கேட்டார் டாக்டர்.

"அதனுல்தான் கண்கள் பழுதாகின என்று சொல்லப் போகிறீர்கள் போலும்! இல்லை டாக்டர். நான் கலரியில் இருந்து பார்த்தால் தானே கண்கள் பழுதாகலாம். நான்தான் முதலாம் வகுப்பில் இருந்து பார்ப்பவனுயிற்றே!" பெருமையோடு சொன்னுன் கண்ணன்.

"நான் அப்படிவிளம்பரம் செய்திருந்தது உண்மைதான். உண்மையான ஏழைகளுக்கு இலவசமாகப் பரிசோதனை செய்வதும் உண்மைதான். ஆனுல் உன்னை எப்படி ஏழை என்பது? முதலாம் வகுப்பிலிருந்து பல தடவைகள் படம் பார்க்க உனக்கு முடியும் போது கண்பரிசோதனைக்காக ஐந்துரூபா கொடுக்க மட்டும் ஏன் முடியாதாம்?" என்று நிதானமாகச் சொன்ன டாக்டர், இறுதியில் "எடு காசை" என்ருர் கண்டிப்புடன்.

வேறு வழியின்றி பையிலே கையை நுழைத்தான் அந்த 'ஏழை'!

— பொ. சண்முகநாதன்

## நம் கடன்

-சி. என். மகேந்திரன்-
(திருமலை)

விண்ணில் விளக்கை
ஏற்றிடு முன்
வீட்டில் தீபம் ஏற்றிய
பின்
கண்ணும் கருத்தாய்
புத்தகத்தை
கையிலெடுத்துப் படித்
திடுவோம்

O

பள்ளிக்கூடம் செல்
லாமல்
பாடம் ஒழுங்காய் கல்
லாமல்
துள்ளித்திரிந்தோர்
எல்லோரும்
துயரப்படுங் கதை
கண்டறிவோம்

O

அப்பா கந்தோர்
சென்றிடுவார்
அவரின் கடமை
அதுவாகும்
தப்பா தாக்கிப்
போடுவது
தினமும் அம்மா
கடனன்ருே!

O

சோதனை எழுதி ஆண்டு
தோறும்
சித்தியடைதல்
இலட்சியமாம்
ஆதலின் நாளும்
படிப்பதுவெம்
அரிய கடனைக்
கொண்டிடுவோம்.

## திருவிழா

— "வள்ளியின் செல்வன்" —

நாளை எங்கள் கோவிலில்
நம்முடைய திருவிழா
காளையர்கள் காவடி
கன்னியர்கள் பாற்குடம்

வாழை மரங்கள் நாட்டுவோம்
வகையாய் மலர்கள் சூட்டுவோம்
ஆழமான அன்பு கொள்
அடியார் கூட்டம் [illegible]குவோம்

வண்ண மலரால் மாலைகள்
வகை வகையாய்க் கட்டுவோம்
பண்ணிறைந்த தமிழிலே
பார்க்கள் பல பாடுவோம்

வேழமுகத்தைக் கொண்டவர்
வேலனுக்கு மூத்தவர்
ஈழநாட்டுத் தெய்வமாய்
இருந்து எம்மைக் காப்பவர்

பத்து நாளும் திருவிழா
பகலிரவாய் நடைபெறும்
நித்தமுமங் காண்டவன்
நின்று அருள் புரிகிருர்

ஆர்க்கும் வண்டுச் சோலையும்
அழகு தீர்த்தக் கேணியும்
யார்க் கருவுக் கோவிலில்
யார்க்கும் காட்சி அளிக்குமாம்

(யார்க்கரு விநாயகர் வருடாந்த உற்சவத்தை யொட்டிப் பாடியது.)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஞாயிறு கதை மலர்

# நிலவு இருந்த வானம்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு முன்னுல் நிரை நிரையாக உயர்ந்து வளர்ந்திருக்கும் மலைவேம்புகளின் கிளைகளில் காகங்களின் கரைவு காதைக் குடைந்து கொண்டிருந்தது.

வீதிக்கு இடப்புறமாக ஆஸ்பத்திரி மதிலுடன் அண்டி அமைக்கப்பட்டிருந்த நடைமேடையில் பிரயாணிகள் போக்குவரவு செய்து கொண்டிருந்தனர். கறுத்து உருகிப் பரந்திருந்த தார் வீதியில் காகங்கள் மச்சம் போட்டு வெண்புள்ளி அடித்திருந்தன

நடைபாதையின் புறமேடையில் வழியை மறித்துத் தன்னுடைய குழந்தையைத் தரையிலே பிறந்த மேனியோடு வளர்த்தியிருந்தாள் கமலி. காய்ந்து கறுத்திருந்த அவளுடைய முகத்தில் மரக் கொம்பர்களையும் ஊடறுத்துச் சூரியகதிர்கள் ஒளிபாய்ச்சிக் கொண்டிருந்தன. மதியவேளையின் தகிப்பைத் தான் தாங்கிக்கொண்டாலும், தன் சிசு தாங்க மாட்டாதே என்றதவிப்பில் மேற்சட்டையின்றிப் போர்த்தியிருந்த தாவணியால் நெஞ்சை இறுக்கி, அதில் மீதங்கண்டு, பிள்ளையின் முகத்திலும் உடம்பிலும் வெய்யிற்படாமற்பாது காத்துக்கொண்டாள்அவள்.

உணர்ச்சி மலையின் எரிவு உள்ளிருந்தே அவளைக் கரித்தது. வெளியே கோடை வெய்யிலின் கொதிப்பு உடம்பைத் தகித்தது. இரண்டு வெம்மைச் சுடர்களுக்கும் மத்தியில் வெளியே அலருத ஊமைக்குரலில் உள்ளே மறைந்து, மறைந்து புலம்பிக் கொண்டிருந்தது நெஞ்சம்.

வாயிருந்தும் பேசாத மந்தைக் கூட்டத்தில் சிறிது முன்னேறி மனிதப் பெண் உருவில் வந்து, உறவு என்ற பாசக்கடலில் ஒரு கண நேரந் திளைத்து, விளைந்த சிறுமலரின் வாட்டத்தைக் காணச் சகிக்காத அந்தப் பெண்ணின் கண் களடியில் பாய்ந்த இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் கன்னமேடைகளில் வீழ்ந்து தெறித்தன.

மத்தியானவேளை ஆஸ்பத்திரிக்குப் போவோர் வருவோருடைய நடமாட்டம் வீதியையும், மேடையையும் நிறைத்தது.

அவளுடைய அந்தநிலைக்கு உரியதான காரணத்தை அவர்களில் ஒருவராவது எண்ணியதாகவோ, கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை. சுயநலம் என்ற கோட்டைக்குள்ளே துரும்பைக் கூட உள்ளேவிடாமல் இறுகப் பூட்டியிருந்தனர் நெஞ்சக்கதவுகளை. அவர்களுக்கு தங்களைப் பற்றிய கவலையைத்தவிர உலகைப் பற்றி, தம் முன்னே மனித உருவங்களாக எலும்புந் தோலுமாக, மனிதனே தனக்கென்று வகுத்து

கடைசியில் அவனையே கருவறுக்கும் மானத்தைக்கூடக் காக்கமுடியாமல் தவிக்கும் பெண்ணைப்பற்றியும், அருகதையற்றஅவளை நம்பிவந்த குழந்தையைப் பற்றியும் கவலைப்பட யார் இருக்கப் போகிருர்கள்?

அவள் நிதானமாகக் கண்களில் வழிந்தநீரைவிரல்களிஞல் சுண்டி எறிந்துவிட்டு, ஏதோ அமைதி பெற்றுவிட்டவள் போல் நிலையான சிலையாளுள்.

சினிமாத் தியேட்டருக்கு அருகில் அவள் குழந்தையுடன் பிச்சைக்கு இருந்தாலும், களியாட்ட மனநுகர்வில், மாலை மயக்கத்தில், பெண்கள்-ஆண்கள் பெருமைப்பட்டு 'வள்ளல்' என்று வாழ்த்தக்கூடிய சந்தடியில் வருவதும்-போவதும் வியாபாரஞ் செய்வதுமாயிருந்த அந்த மக்கள் கூட்டம் ஏதாவது போட்டு, வெறுமனே கிடக்கும் அவளுடைய தகரத்தையும், பசியால் வாடும் அந்த இரண்டு சிறுமை வயிறுகளையும் நிரப்பியிருப்பார்கள்,

அவள் ஆஸ்பத்திரிக்கு அருகில் வந்திருந்ததன் மர்மம் அல்லது சூக்குமம் இந்த மண்ணவர்களுக்குத் தெரியவே தெரியாது. தெரியவந்தாலும் நாங்கள் பெற்றவர்களை இழந்து,பெற்றவற்றை இழந்து தவிக்கையிலே, பிச்சைபோடுறதுக்கு என்ன செய்வது என ஆறி, மானசீகமாகத் தர்மசிந்தையராகி மறைந்திருப்பார்கள்.

''ஐ...ய்...யோ பாவம். கடவுளுக்கு ஏன் இந்த அநியாயமாம்? பெண்ணுகப் பிறந்தவள் மானம் கெட்டு இந்தச் சனப் புழக்கத்தின் மத்தியில் இருக்கிற இருப்புஉக்ம்!''

### ★ கைலாசநாதன் ★

''அவளுக்கு என்ன! புருஷனைக் கொன்றிருப்பாள். அல்லது பத்துப்பேருக்குப் பத்தினியாயிருப்பாள். இந்தக் கலியுகத்திலை பெம்பிளை பிச்சை எடுத்தால் இதுகளிலை ஒண்டை அவள் செய்திருக்க வேணும்.''

''சும்மா பழிசுமத்தாதையணை. உனக்கு ஊரிலையுஞ் சரி எங்கையுஞ் சரி உந்த வசை வைக்கிற குணம்மட்டும் போகாது. நீ மருந்துக்கு வந்தா மருந்தை வாங்கியண்டு பேசாமல் போவன். வஸ்ஸும் வெளிக்கிடப் போகுது.''

பழி சொன்னவளுக்குப் பதில் சொல்லியபடி அவளுடன் வந்தவள் நடந்து கொண்டிருந்தாள். அவர்களில் ஒருவராவது கமலிக்கு ஒரு காசு கூடப் போட எண்ணவில்லை. ஏக்கத்தை விழிகளிற் சாய்த்து, தனக்குப் புதிதாகக் கிடைத்த வசைமொழியை நெஞ்சக் கடலில் வன்மக்கல்லோடு கட்டி எறிந்துவிட்டு தரையில் கிடந்த புதல்வனைப் பார்த்தாள்.

அவனே, தாயின்முகத்தை ஒருதடவை பார்த்துவிட்டு உள்ளிழுக்கும் வயிற்றின் மேல் கைபதித்தபடி கூசுகின்ற வானத்தில்கண்களைப் புதைத்திருந்தான்.

'நீ செய்ததைய இவர்கள் சொல்கிருர்கள்?' என்பதுபோல பட்டது அவனுடைய பார்வையும், அந்த இனம் புரியாத அலட்சியமும். கமலி குழந்தையின் அந்தப் பார்வைக்கு அப்படித்தான் கற்பிதஞ்செய்ய முடியும்.

அவளைப் பொறுத்தவரையில் மனச்சாட்சி என்பது மனிதனுல் கற்பிக்கப்பட்ட ஒன்ருகவே இருந்தது. எத்தனையோ விபரீதச் செயல்களைச் செய்துவிட்டு வெள்ளாடைக்குள் மறைந்து புனிதாத்துமாக்கள் என்ற பெயரை இலவசமாகஅடைகின்ற ஆயிரக்கணக்கான பெரியவர்களை அவள் கண்கூடாகக் கண்டிருக்கிருள். பேசத்தெரியாத தன்னுடைய மகனின் பொருளற்ற பார்வைக்குத் தன்னையும் உணராத மனஉந்துதல் புது விளக்கங் கொடுத்தது.

'ம்' என்ற ஒலியைத் தொடர்ந்து அவள் முன்னிலையில் வைக்கப்பட்டிருந்த பழைய 'கவ் அன் கேற்' பேணியை நோக்கிக் கவிந்த கை ஒரு காசுக்குற்றியுடன் பதிந்தது.

பலமாக வீசிக்கொண்டிருந்த காற்றில் அடிக்கடி சிலும்பிக் கொண்டிருந்த முன்தானை அசையாமல் பிடித்தபடி இருந்த கையை நகர்த்திப் பேணியைத் தூக்கி அந்தத் தர்மத்தை ஏற்றுக்கொண்டாள் கமலி.

'டங்' என்ற ஒலியுடன் விழுந்த பத்துச்சதநாணயம் அந்தப் பேணிக்குள் வேறு ஒன்றும் இல்லை என்று பறைசாற்றி விட்டு அடங்கியது.

அந்தக் கணத்தில் புதுவரவில் மகிழ்ந்து சற்றுத்தன்னை மறந்த கமலியின் மார்பகங்களை மூடியிருந்த தாவணிச் சேலை ஆபாசக்காட்சி ஒன்றை வீதிகளின் நடுவில் அமைந்த இடைவெளியில் தங்கள் 'கார்'களை நிறுத்திவிட்டு என்ஜின் பக்கமாகச் சாய்ந்து வேடிக்கைபார்த்தபடி நின்ற சில இளசுகளுக்குக் கண் விருந்து அளிக்க எத்தனித்த மாத்திரத்தே அவள் மறுபடியுந் தாளுகி 'லபக்' கென்று தன் மேற்புறத்தை இழுத்து மூடிக்கொண்டாள்.

ஆரம்பமே சேற்றிலும் சுரியிலும் தொடங்கியிருப்பின் கமலிக்கு வாழ்வு கசந்திருக்காது. தெளிந்த நீரோடையில் துள்ளும் மீனுகிக் குழந்தையாய்க் குமரியாய் வளர்ந்த அவள், வளர்த்தவர்கள் வாழ்க்கைத் துணை ஒன்றை அவளுக்குத் தேடித்தந்து, வாழ வைத்த வேளை கிடைத்த சுகம் முழுவதும் கிடைக்காததால் துணைக்குத் துணைதேடி யது அவளின் தவறோ? அல்லது அவளுக்குத் துணை யாக வந்த துணையின் இயலாமை ஒரு பொல்லாப்பு ஆகுமா? அந்த இருவருக்கும் தான் தெரியும்!

உருண்டு திரண்டு சிவப்பு மேனியாய் இருந்த கமலியின் அங்கங்கள் கண்கள் படைத்தவர்களுக்கு இனிப்பாக இருந்தால், அது அவள் செய்த குற்றமல்ல. ஆனுல், காட்சியோடு மாத்திரம் கண்டவர்கள்நின்றிருந்தால் அவள் இன்றும் அமைதியாக இருந்திருப்பாள்.

தன்னுடைய அழகைத் தானே தெரியாமல் இருந்த அவளுக்கு அவளின் பெருமையை எடுத்துணர்த்திய அந்த 'ரஸிகனு'க்கு அவள் ஒருநாள் 'நன்றி' செலுத்தியது என்னவோ உண்மைதான். அதற்காக அவளுடைய வாழ்வு இன்று இப்படிப்போகவேண்டும்என்ருே, போகும் என்ருே இதுவரை யாரும் எண்ணவில்லை.

அடிக்கடி காற்றில் அலைப்புண்ட அங்கவஸ்திரம் அருகே நின்ற கார்ச்சாரதியின் இல்லாமையைச் சிறிது நிரப்பத்தான் செய்தது. தன் உணர்வில் இன்பங்கண்டு தனியேதவித்த அவனுக்கு 'ரிஸ்ஸு' போட்ட பண்டந்தான் இனிக்கும் என்பதில்லை. அவன் தன்னுடைய 'பாக்கெட்'டில் விரல்களை நுழைத்து வெளியே வந்த பணச் சுருள்களில் பத்துருபாவை வெளியே எத்தபடி அவளை நோக்கி அச்சநடைபோட்டான்.

ஒருநாள் கமலி தவறியதற்கு அவளுடைய புருஷனைத்தான் காரணஞ் சொன்னுள். முழுமைக்காக ஏங்கிய அவள் மூன்று ஆண்டுகாலமாக மூத்துவதற்கு ஒரு 'குஞ்சு' இல்லாமல், கடவுளிடம்போகாமல் தன்னுடைய கடையிலே வேலைபார்த்தவனிடம் போனுள். கடவுளிடம் பெற்ற பிள்ளைவரத்துக்குத் தூய்மைக் கிரீடஞ்சூட்டும் அந்தக் குருடுகள், மனிதனிடம் பெற்றதற்கு மாசு கற்பித்தது கமலியின் தத்துவத்தில் 'பட்டிக்காட்டுமரபா'கவே இருந்தது.

''நீ ஏனணை பிள்ளை இந்த முடிவுக்கு வந்தநீ? கடவுளேயெண்டு 'கட்டும் காலாய்' இருக்கிறே. ஆரன் எண்டாலும் என்ன, உன்னைப் பாக்கக்கூடிய ஒருத்தனைப் பாத்தண்டு சும்மா இருந்துட்டுப் போறதை விட்டுப்போட்டு இப்படி வெக்கம் இல்லாமல் வந்து றவுணுக்கை பிச்சை எடுக்கிறியே. இந்தா.''

சொல்லிக்கொண்டே ஒரு நாணயக் குற்றியை உருட்டிவிட்டாள் ஒருத்தி. கமலியின் இதழ்களின் கோடியில் சிறுகக்குறுகி வெளிப்பட்ட வரட்டு முறுவல் அவளுக்கு பதில்கொடுத்து மறைந்தது.

'என்னட்டை என்ன இருக்கெண்டு நானே நம்பிக்கையோடை அறிஞ்சிருக்கிறன். ஏதோ புதிசாக இந்த மனுஷி சொல்லிப் போட்ட நினைப்பிலை போகுது என்னுடைய சபதம் ...? நான் மறுபடியும் வாழ ஆசைப்பட்டுத்தானே இஞ்சை வந்திருக்கிறன்.'

கமலி முதல்முறையாக நினைக்கத் தொடங்கினுள். அவளுடைய முகத்தில் நம்பிக்கை வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. அதனைப் பிரதிபலித்து நெடுமூச்சு ஒன்று துன்பக் களையுடன் வெளியே புறப்பட்டது.

''சேச்சே! இந்தப் பட்டணம் வரவர மெத்த மோசம். பெம்பிளையளின்ரை துணிச்சல் ... அப்பப்பா! இந்த ஊரிலை இருந்தா நம்மடை மானமும் போயிடும்...''

பதினெட்டு அங்குலத்துடன் தன்னுடைய முழுப் பாரத்தையும் தாங்கியபடி கொடிக் கம்பத்தில் சுற்றி வைத்த சேலை போன்ற தோற்றத்துடன், முழங்கையில் 'அலமலக்காக' ஆடிக்கொண்டிருந்த கறுப்பு நிற அழகுப் பையுடனே

(9-ம் பக்கம் பார்க்க)

## தமாஷ்!

### நல்ல காரணம்!

''என்ன நீங்கள் இப்பொழுதெல்லாம் 'கிளப்பு'ப்பக்கமே வருகிறதில்லையே?''

''ஆமாம், என் குடையை அங்கே வைத்து விட்டு வந்துவிட்டேன்;''

அப்படியென்ருல்அங்கே போகாமல் இருப்பானேன்?''

''நான் அங்கேயிருந்து எடுத்து வந்த குடை இன்னும் நல்லதாயிருந்து விட்டது!''

○

### அபிப்பிராயம் சரி!

நண்பன்: டேய் சிங்கம்! நேற்று உன்னிடம் வாங்கிக்கொண்டு போன புத்தகம் மகா மோசமானது போலிருக்கிறதே!

நாதன்: ஏன் அப்படிச் சொல்லுகிருய்? அதற்குள் புத்தகம் முழுவதும் படித்துவிட்டாயா?

நண்பன்; இல்லை.நேற்று நான் போகிறவழியில் அந்தப் புத்தகத்தை 'பார்க்'கில் மறந்து போய்விட்டேன்.இன்றைக்குப் போய்ப் பார்த்தால் அது அங்கேயே இருக்கிறதே!

○

### பதில் எப்படி?

''உன் அப்பா பாங்கில் காஷியர் என்கிருய், உன்னிடம் காலசயே காணுமே!''

''உன் தகப்பனுர் பல் வைத்தியராகவிருக்கிருர், உன் பாட்டியின் வாயில் ஒருபல்லையும் காணுமே!"

○

### டாக்டருடன் யோசனை!

''என்னுடைய குழந்தை பௌண்டன் பேனவை விழுங்கிவிட்டது. உடனே வாருங்கள்!'' என்ருர் ஒருவர் டெலிபோனில்.

டாக்டர்: இதோ வருகிறேன்;இன்னும் பத்து நிமிடத்தில் வந்துவிடுகிறேன்.

கூப்பிட்டவர்: நீங்கள் வரும்வரையில் நான் என்ன செய்யட்டும்?

டாக்டர்: (எரிச்சலுடன்) பென்சிலால் எழுதிக் கொண்டிரும்!

○

### வேலை முறை!

ஹோட்டலில் சாப்பிடுபவர்: ஐயா, விக்குகிறது, மாரடைத்துக் கொள்ளுகிறது, ஒரு கிளாஸ் தண்ணீர் கொடும்!

ஹோட்டல் சர்வர்; இது நான் ஸப்ளை செய்யும் மேசையல்ல. ஸார்!

○

### வாங்கவில்லை!

தகப்பனுர்: ஏன்டா ராமு! ஏன் பரீட்சையில் இவ்வளவு குறைந்த மார்க்கு வாங்கியிருக்கிருய்?

ராமு: நான் வாங்கவில்லை, அப்பா! வாத்தியார் தான் கொடுத்தார்!

○

### உண்மைதான்!

''உங்கள் நாய் என் பிள்ளையின் காலைக்கடித்துச் சதையைப்பிடுங்கி விட்டது, ஸார்!''

''இருக்கவேஇருக்காது! என் நாய் மாமிசத்தைத் தின்னுது! தப்பித் தவறி மாமிசத்தில் வாய்வைத்தாலும் உடனே உதறி எறிந்துவிடுமே!''

—பரணிகாந்தன்


"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

● பெனியன்கள்

● ஸ்போட் சேட்டுகள்

● ரீ சேட்டுகள்

● கால் மேசுகள்

(Nylon & Cotton)

லேடன் இன்டஸ்ரீஸ் லிமிடெட்

7, ஆஸ்பத்திரி வீதி :: யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வானத்தாமரை

— நா. யோகேந்திரநாதன் —

குறுநாவல்

மலைமங்கையின் எழில் மேனியில் யாரோ ஆழமாகக் கீறியதால் ஏற்பட்ட வடுபோன்று, ஓர் ஒற்றையடிப்பாதை போய்க்கொண்டிருந்தது. அதன் அருகில் புதர்கள் அணி பசெய்து கொண்டிருந்தன. சின்னஞ் சிறு பறவைகளின் ஒலியும், சில்வண்டுகளின் ரீங்காரங்களும் அவனை வரவேற்பது போல் ஆரவாரத்துடன் தொனித்துக்கொண்டிருந்தன.

முருகன் வேடனாகவும், விருத்தனாகவும் வள்ளியைத் துரத்தித்திரிந்த இடங்களையெல்லாம் பார்த்தபொழுது சிவலிங்கத்தின் இதயமெல்லாம் இன்பமயமான கிளுகிளுப்புஉண்டாகி, ஆனந்தம் தருவதை உணர்ந்துகொண்டான்.

''மனிதன் வாழ்வில் அவன் புகுந்து வாழவேண்டிய ஆலயங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். அறமும், வீடும் சமயபோதகர்களால் நாளும் பொழுதும் வலியுறுத்தி வரப்படுகின்றன. மனிதன் உயிர்வாழ்வதற்குப் பொருள் அத்தியாவசியமானதால் அதை அவனாகவே தேடிக்கொள்கிறான். மற்ற மூன்றும் ஒவ்வொரு பக்கபலத்துடன் வாழும் பொழுது இன்பத்தை மட்டும் நிர்க்கதியாகவிட இறைவன் விரும்பவில்லை. வாழ்வின்பத்தை இறைவன் தானாகவே வாழ்ந்து காட்டினான். அவர்காட்டிய காதல் அன்பு போன்றவைகள் மனிதனுக்கு இன்பத்துக்கு வழியமைத்துக் கொடுக்கும் பாலங்களாகின்றன.'' எண்ணியவாறே சிவலிங்கம் நடந்துகொண்டிருந்தான்.

''சிவா,'' மெல்லிய குரலொன்று அவன் காதிற் கேட்டது, மெல்ல நின்று சுற்றும் முற்றும் நன்றாகப் பார்த்தான். எவரையுமே காணவில்லை

''சிவா!''

அதே குரல் மீண்டும் கேட்டபொழுது அது யாருடையது என்பதை அறிந்து கொண்டான். அவன் நெஞ்சிலும் நினைவிலும் வாழ்ந்து கொண்டிருந்த அவள்குரலை அவன் அறிந்துகொள்ளமுடியாவிடில் அதைவிட விந்தை வேறு வேண்டுமா? அவனின் இதயத் துடிப்பின் ஒலியிலேயே சந்திரமதியின் மென்மையான அழைப்புக் கேட்டுக் கொண்டிருந்தது.

''சிவா! வள்ளியைத்தேடி ஓடுகிறீர்களே. இந்தத்தெய்வயானையை மறந்துவிட்டீர்களா?''

''இல்லைச் சந்திரா! உன்னை நான் மறப்பதா? நீ மென்மையாகத் தலைகுனிந்து நடந்துவரும் எழில் என்றுமே என் கண்களை விட்டகலாதே! நீ உன் மெல்லிதழ்களுக்கிடையே உற்பத்தியாகும் அந்தச் சொற்களிற் தொனிக்கும் ஆழங் கலந்த அமைதி என் காதில் இன்னமும் ஒலித்துக்கொண்டிருக்கிறதே! நீ வீணை எடுத்து மீட்டும்பொழுது அதன் மேல் விளையாடும் நீண்ட மெல்லிய விரல்கள் என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும். அப்படியிருக்க நான் எவ்வாறு உன்னை மறக்கமுடியும்? அப்படியில்லையென்று மறந்தாலும் என் இதயத்தை வாடகை கொடாமலே வாழ்விடமாக்கிக் கொண்டிருக்கும் நீதான்விடுவாயா?''

அந்தச் சந்திரா அப்படியே அவன் முன் தோன்றி, அவன் வார்த்தைகளால் இன்பமடைந்தவளாக நாணித்தலை குனிந்து அவன் முன் நின்றாள்.

''அத்தான்!''

அந்தக்குரல் சாருகேசியினுடைய என்பது புரிந்து விட்டது.

''என்ன சாரு?''

''என்னை நீங்கள்கைவிட்டு விடுவீர்களா?''

''என்ன சாரு உன்னுடைய கேள்வி? என் மனவயலில் காதல் வித்தைத் தூவியவள் நீதானே. உன் எழில் என் இதயத்தில் நிரந்தரமாக ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. அவையெல்லாவற்றிலும் மேலாக நான் சுகமற்ற நிலையில் நீ செய்த அந்தச்சேவை எங்களுக்குள் அறுக்கமுடியாத பெரும்இணைப்பை ஏற்படுத்திவிட்டதே!''

சாருகேசி தோன்றி நிம்மதிப்பெருமூச்சொன்றை விட்டு குறுகுறுத்த கண்களால் விழுங்கிவிடுவதுபோல் பார்த்தாள்.

அமைதியும் கலகலப்பும் உடன்பெடுத்தாற்போல் இருவரும் காட்சியளித்தனர். சிவலிங்கம் தன் இருகரங்களையும் நீட்டிக்கொண்டான். இருவருமே வள்ளியும் தெய்வயானையுமாக அவனுடன் இணைந்துகொண்டார்கள்.

அந்த இடத்தில் குடிகொண்டிருந்த பரிபூரண அமைதி. அவனை நினைவலைகளிலிருந்து வெளியே மீட்டு வந்தது. குருவிகள், பறவைகள் யாவும் தங்கள் ஒலிகளை நிறுத்தியிருந்தன. காற்றுக் கூட மரங்களையாட்டாமலும், இலைகளையுதிர்க்காமலும் மென்மையாகத் தன் தன்மையே தோன்றாமல் வீசிக்கொண்டிருந்தது. அவனுடைய காலடி கூட அவனுக்குப் பயங்கரமாக ஒலித்தது.

அந்த அமைதியின் காரணத்தை அவனாற் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் ஏதோ ஒரு தெய்வீக சக்தி அந்த இடத்தில் ஆட்சி புரிவதை அவனால் அறிந்துகொள்ள முடிந்தது. சுற்றும் முற்றும் நன்றாகப் பார்த்தபொழுது, புற்றரைகளால் மூடியும், மூடாமலுமான நிலையில் தவநிலையில் அமர்ந்திருந்த ஸ்வாமியார் தான் அதன் காரணகர்த்தா என்று அறிந்து கொண்டான். தவத்தால் மெலிந்து தடியாகப்போயிருந்த ஒல்லிக் கால்களினடியிற்சென்று வணங்கினான் சிவலிங்கம்.

''ஸ்வாமி!''

அவருடைய பயங்கரமான குழிவிழுந்த கண்கள் மெல்லத் திறந்தன. ''அப்பனே! கவிதையால் புத்தம் புதிய உலகத்தையே சிருஷ்டிக்கும் திறமை பெற்றவன் நீ! ஆனால் நீ வெகுவிரைவில் உன் மனைவிக்கு மரண கீதம் பாடவேண்டிய நிலை ஏற்படும்.''

''ஸ்வாமி! எனக்குஇன்னும் திருமணமே ஆகவில்லையே! அப்படியானால் நான் திருமணமே செய்யக்கூடாதா?''

உலர்ந்து போன உதடுகளால் ஒருவரட்டுக் கேலிச் சிரிப்பை வீசிவிட்டு அவர் மீண்டும் கண்மூடி மௌனியானார்.

''ஸ்வாமி! ஸ்வாமி!''

அவர் சிலையானார்!

அவன் மீண்டும் கத்தினான் ''ஸ்வாமி! தயவு செய்து கருணைகூரக் கூடாதா?''

அவன்கூப்பாடுகள் அர்த்தமற்றனவாகி மலைச்சிகரங்களில் மோதி எதிரொலித்தனவே தவிர அவர் கண்களைத்திறக்கும் சக்தியற்றனவாகித் தேய்ந்து மறைந்தன,

(தொடரும்)

## பூஜ்யம்

ஒருவன்: என் மனைவி எல்லாக் கலைகளிலும் சிறந்தவள்?

மற்றவன்: அப்படியா! எவற்றில்...?

ஒருவன்: ஏன்? இலக்கியம், ஓவியம், சங்கீதம் எல்லாவற்றிலுந் தான்.

மற்றவன் : ஆனால்... குடும்பக் கலையில்...?

## வெம்பினள் ஏந்திழையாள்

ப. முத்துக்குமாரசாமி


கற்றைக் கருங்குழலில்
கமல மலர்ப்பாரம்
பற்றில் கொடி
யிடைக்குப்
பாரம் பாவு தனம்
வற்றாக் கவினுடற்கு
வாய்த்த அணிபாரம்
மற்றை மலர் மனதின்
பாரம் எது
கொல்லோ?

கொல்லும் கருவிழியிற்
காணும் கருணையறம்
பல்லும் பகர் முல்லை
பங்கய நல் லதரம்
சொல்லோ
இசையமுதம்
சாரும் அன்னநடை
நல்லாள்
மனத்திடையே
நீண்ட
நினைவெதுவோ?

கொன்றை
மலரெடுத்துக்
கோத்துக் கலைத்து
நின்று
என்றைக்கும்
இல்லாது
எழில் விசும்பை
நோக்கி
ஒன்றைப்
பறிகொடுத்த
ஒரு கலக்கங் கொண்டு
கன்றைப்
பிரிந்தவொரு
கறவைப் பசுவானாள்

கோலக் குமரனவன்
காரிகையின் கனவில்
மாலைதனைச் சூடி
மருவுதலுஞ் செய்து
வாலைக் குமரியுனை
வந்து மணம்
செய்வேன்
வேளைபார் என்றதனால்
வெம்பினாள்
ஏந்திழையாள்

வேளையெலாம்
பார்த்து
வெந்து
மனமொடிந்து
காளைதனைக் காணாது
கலங்கியே
சென்றவளும்
வேளைச்சுர
பூபதியாம்
வேலனவன்
சந்நிதியில்
வேளை இனிவேண்டாம்
வேலவனேயென
வீழ்ந்தாள்




விவேகமுள்ள தாய்மார்,
தங்கள் குழந்தைகளின் சுகவளர்ச்சிக்கு
ஒஸ்டர்மில்க்கையே நம்புகிறார்கள்.

தாய் பால் ஊட்ட முடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்பமுடியும்.

தூய்மை மாறுத்தன்மையுடைய ஒஸ்டர்மில்க், ஆரோக்கியமளிக்கும் ஓர் பால் ஆகாரம். பச்சிளங் குழந்தையின் மென்மையான வயிற்றுக்கு பாதுகாப்பானது. இரும்புச்சத்தும், விட்டமின் Dயும் உள்ளிட்டு அமைக்கப்பட்ட ஒஸ்டர்மில்க், குழந்தையை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும், வளரச்செய்கிறது.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக குழந்தைகள் வளர்ந்து திகழ ஒஸ்டர்மில்க்.




190/65

ஒஸ்டர்மில்க்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை (7ம் பக்கத் தொடர்ச்சி)

நின்ற ஒருத்தி அரற்றிக் கொண்டாள்,

''இந்தா உன்னைத்தானே! உனக்கு அப்படி ஒரு 'பிளவ்ஸ்' வாங்கக் காசு கிடைக்கல்லியா?''

''நீ சும்மாயிரடி ரூபா! ஆரெண்டால் என்ன எப்படியாவது போகட்டும். நீ வாநாமள் போவம்?''

ரூபாவுடன் கூடிவந்த மற்றவள் கூறியபடி அவளை இழுத்தாள்.

''ஏன் தாயே முதலிலை நீ ஒரு சட்டையை வடிவாகத் தையன். அதுக்குப் பிறகு என்னைச் சொல்லு. நான் தான் வசதியே இல்லாமல் தைக்கவில்லை. உனக்கும் உன்ரை பகட்டுக்கும் என்ன வந்தது?''

கமலிக்கும் பேசத்தெரியும் என்பதை அவள் காட்ட நினைத்தபோது, 'டாங், டாங்' என்று மணியோசைபோல் பேணிக்குள் விழுந்த நாணய வட்டங்களை வியப்புடன் பார்த்து அயர்ந்தாள். ரூபாவின் விரல்களிருந்து மூன்று வெள்ளி ரூபாக்கள் பேணிக்குள் கிடந்து கமலியைப்பார்த்துச் சிரித்தன.

கமலி இந்தப் பிச்சைத் தொழிலை ஆரம்பித்துமூன்று நாட்கள்தான் முடிந்திருந்தன. ஆனால் அந்த மூன்று நாட்களிலும் அவளுக்கு நிறைய அநுபவங்கள் கிடைத்திருந்தன. வெறும் வார்த்தை அபிஷேகங்களும், வீண்வார்த்தை மாரிகளும் பேச்சற்ற தர்மங்களும்...

புரியாத உலகத்தை ஓரளவுக்கு வெளிவாரியாகப் புரிந்து கொள்ளவேண்டுமானால் பிச்சை எடுப்பதுதான் ஒரு வழி. வெள்ளைக்கும் கறுப்புக்கும் வித்தியாசம் கண்ணளவில் மட்டுமல்ல, மனத்தளவிலும் உண்டு என்பது தெரியவரும்.

கமலி ஆரம்பத்தில் பிச்சையை ஒரு 'பிஸினஸ்' என்றுகருதவில்லை. அப்படிச் செய்ய அவளுக்குந் திராணியில்லை. தன்னிடமில்லாத ஆத்மபலத்தை அழகு மறைத்தனால், அந்த அழகு நிறைந்த உடலை அர்ப்பணிப்பதன் மூலம் தன்னை வளர்க்கலாம் என்ற எண்ணமும் அவளுக்கு இல்லாமல் இல்லை. அதனால் பிச்சை 'பிஸினஸ்'க்கு ஒரு லைஸன்ஸ்' என்று அவள் கருதியதில் தவறில்லை.

சாரதி மெல்ல மெல்ல நடந்து அவளை அணுகி வந்தான். மத்தியான வேளை கடந்துவிட்டதால், மறுபடியும் ஐந்து மணிவரை அந்த வீதியில் சனநெருக்கடி இருக்காது என்பதை மெய்ப்பித்தபடி, வந்தவர்கள் எல்லோரும் விரைந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு அது ஆறுதலை அளித்தது. ஒருகையில் மடங்கியிருந்த பத்து ரூபாவை இலக்கந்தெரிய மடியவைத்து விட்டு, கையில் சில சதக்குற்றிகளை எடுத்தான் அவன்.

சாரதியின் நெஞ்சு அடிப்பதை அதிகரித்துக்கொண்டதை விரல்களின் நுனியின் நடுக்கம் வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டிருந்தது. முகத்தின் அடிவாரங்களில் 'ஷேட்கொலர்' வரை வியர்வை வழியத் தொடங்கியது, அவன் அசாத்தியத்துணிவில் அவளைக் கேட்டான்.

''இந்த வெய்யிலுக்குள்ளே ஏன் சும்மா கிடக்கிறாய். ஏறன் காரிலை. நல்ல இடத்துக்குப்போவம்,''

''உம்...'' கமலி முறைத்தாள்.

சாரதியின் அச்சம் சற்று அதிகரித்தது. கையிலிருந்த பத்து ரூபாவைச் 'சரக்சரக்' கென ஒலியெழுப்பியபடி மெதுவாக அவள் பக்கமாகக் குனிந்து, ''இதோடை இன்னும்'' என்றான்.

நீண்ட நாட்களுக்குப் பின்பு பெரிய இலக்கத்தைக் கண்டது ஏதோ 'மகிழ்ச்சி'யாக இருந்தாலும், மீண்டும் அதேபிழையைச் செய்யக் கூடாது என்று உள்ளிருந்து ஏதோ சொல்வதுபோன்றிருந்தது அவளுக்கு. பழமை நினைவில் ஆவேச நினைவு வந்ததும், தன்னுடைய புதுநோக்கு மண்கோட்டையாக, அவனுடைய கன்னத்தில் அறைய எத்தனித்தவள், மறுபடியும் பெண்ணுகித்தலைசாய்ந்தாள், ஆத்மாவுக்கு பலன்கிடைக்காத வரைக்கும் அவளுடைய அழகு வென்றுகொண்டே இருக்கும். அதனை உணர்கின்ற அளவுக்கு கமலி வளர்ச்சியடைந் திருந்தாள்.

இவை எல்லாவற்றையும் அவளுக்கு எதிர்ப்புறமாக இருந்த கடையின் பணப் பெட்டியருகில் அமர்ந்திருந்தவன் கண்டு என்ன செய்கிறான் என்பதை கண்களைத் தியாக்கி விறைத்துப் பார்த்தாள் கமலி.

அவன் சாரதியையும், கமலியையும் சுட்டுப்பொசுக்குமாப்போல் பார்வையைச் செலுத்தியிருந்துவிட்டு, கமலி தன்னைப்பார்த்ததும் வேடிக்கை உணர்வில் கடையின் மேற்பகுதியையும், சுற்றிவர அமைந்த படங்களையும் அநாயாசமாகப் பார்க்கத் தொடங்கினான்.

''துரோகி''

கமலி கத்திய சத்தம் சாரதியைக் கலக்கியதுடன், சந்தேகத்தையும் அளிக்கவ, அவன் அவளை விட்டு விலகி, தன்னுடைய கார் நின்ற இடத்துக்கு வந்தான். புதிய நிலையில் இருந்த இருப்பில், இன்னொருவன் தன்னை வென்றுவிட்டான் என்ற ஏமாற்றத்தின் பழியுணர்ச்சியுடன் காருக்குள் அமர்ந்து, முன்கண்ணாடி மூலம் கடைக்காரனையும் கமலியையும் பார்த்தபடி இருந்தான் சாரதி.

கடைக்காரனுக்கு சமயம் சரியாகவேபட்டது, தான் இருந்த இடத்துக்கு தன்னுடைய வேலையாளைக் கூப்பிட்டு அமர்த்திவிட்டு, படிகளில் இறங்கி விரைந்து வந்தான். அவனுடைய நடையில் இருந்தவேகம் அவளைக்கொலை செய்யும் நினைப்புடன் வந்தாற்போல் சற்றுவிறைப்பாகவே தெரிந்தது.

சாரதி இதனைப்போல் எத்தனையோ 'கேஸ்'களை கண்ட அநுபவசாலி. இந்தக்கடைக்காரனைச் 'சும்மா' விடுவதான எண்ணம் அவனிடம் இருந்ததாகத் தெரியவில்லை.

''அடிபாவி! உனக்கு வெக்கமில்லையா? உன்னை மாதிரிப் பெம்பிளையளை ஏன் அவமானப் படுத்தியண்டு, என்ரை உயிரையும் வாங்குறாய்? என்னைத் தெரிஞ்சவங்கள் இந்தப்பக்கமாக இல்லை. அல்லாட்டி என்ரை மானமே போயிருக்கும். இன்னும் உன்ரை குணம் மாறவில்லையே. எங்கையாவது போய்ச் செத்துத் தொலையன். பிள்ளையை வேணுமண்டா நான் வளர்க்கிறன்...''

சாரதிக்குக் கேட்காமல் இருக்கவேண்டும் என்ற உந்தலில் அவன் பற்களை நறும்பித் தன்னுடைய ரௌத்திரத்தைத் தீர்த்தபடி, பசிக் கொண்டிருந்தான்.

கமலி கண்கள் தாரையாகப் பொழிய, மகனை மடியில் சார்த்தி, இருந்த நிலை குலையாமல், விழிகளை உயர உயர்த்தி அவனைப்பார்த்தபடி இருந்தாள். அவளுடைய அடங்காத அழுகைக்கு ஒத்தாசையாகஇதழ்கள் விநாடிக்குவிநாடி துடித்துக்கொண்டிருந்தன. கண்டக் குழியில் வரண்டுபோகும் நாவை நனைக்க மிடறு எடுக்கும் சத்தம் பெரிதாகக் கேட்டது

''கிளிநொச்சி ராச்சியமிருந்து கடையையும் மாத்தியண்டு இஞ்சை வந்தனான், இந்தக்கண்ணராவியைப் பாக்கத்தானோ?

உன்னாலை போகமுடியாட்டிச்சொல்லு. நானாவதுஇந்த உலகத்தைவிட்டுப்போறன். எனக்கு இதல்ல...இன்னும் வேணும்......''

கடைக்காரன் குழந்தையாகி வாய்விட்டு அழத்தொடங்கினான்.

சாரதியின் கண்கள் கண்ணாடியூடாகப் பார்வையிலிருந்தன. ஒலிகள் காதுகளுக்கு எட்டவில்லை. அவன் காரைவிட்டு இறங்கி நடுவீதி நீளம் நிறுத்தியிருந்த கார்ச்சாரதிகள் சிலரிடம் ஏதோ சொல்ல, 'இரை' கிடைக்கப்போகும் ஆனந்தத்தில் அவர்கள் அனைவருமேகூட்டாகநடைபோட்டு வந்து கமலியையும், கடைக்காரனையும் வளைந்துகொண்டார்கள்.

கமலியின் கண்களிலிருந்தும், கடைக்காரனின் கண்களிலிருந்தும் நீர் பெருகிக் கொண்டிருந்ததைக் கண்ட சாரதிகள் சற்றுப்பின்வாங்கினர். ஏமாற்றத்தால் அடிபட்ட அவன் மட்டும்வெறிபிடித்தவனாகி, கடைக்காரனைப்பிடித்து உலுக்கினான்.

''என்னய்யா! இதென்ன ஆஸ்பத்திரிறோட்டா, இல்லை உன்னுடைய வீடா? என்ன பிச்சைக்காரி எண்டாப்போலை...... அவளை 'ஷேப்' பண்ணுறியா? உங்க தரவளியள் வெலிக்கடையிலை இருக்கவேணுமடா.''

கடைக்காரன் பயந்து ஓடிவிடுவானென எதிர் பார்த்தான் சாரதி. அவன் கண்ணீரைத்துடைத்தபடிசாரதியிடம்ஏதோசொல்ல வாயெடுத்தபோது, 'பளீர்' என்று கன்னத்தில் விழுந்தது.

கமலிக்கு அறிவு கலங்கியது. ''அடபாவி......ஏன் சும்மா நிண்டவரை அடிக்கிறாய்?'' என்று அலறிக்கொண்டு, மகனைத் தூக்கியபடி கடைக்காரனை ஒருகையால் தாங்கினாள்.

''ஊக்! விஷயத்துக்குமுந்தியே இவ்வளவு ஒற்றுமையா?'' என்றபடிகமலிக்கு அடிக்க ஓங்கிய சாரதியின் கையை, அவர்களில் ஒருவன் தடுத்து நிறுத்தினான். ''அவளைத்தொடாதே!'' கடைக்காரன் உணர்ச்சியைப்பலமாக்கி உரத்துக்கத்தினான்.

''நீ ஆரடா ...... அதைக் கேட்க...?''

''நான்... ம்! அவளுடைய ...'' கடைக்காரன் ஏதோ நினைத்தவனாய் மௌனியானான்.

''இவர் என்னுடைய புருஷன் ... உங்களைப்போல ஆக்களாலேதான் நாங்கள் இப்படியானோம்!''

கமலி விக்கி விம்மி அழுதாள்.

அவன் அழுதான்.

நல்ல வீதிகளில் மாத்திரம் தங்களுடைய காரைச் செலுத்த விரும்பும் மனம் படைத்த அவர்கள், மனத்தையும் அப்படிச் செலுத்த முடியாது கண்ட தோல்வியில் தலை கவிழ்ந்தனர்.

கமலி வழிந்த கண்ணீரைத் துடைத்துவிட்டு, ''நான் உங்களோடைவாறன். எத்தினை காயிதம் போட்டன். ஒண்டுக்கும் பதிலில்லை, பிறகு நானே வந்தன். என்னைப் பிடிச்சு வெளியே விட்டீங்கள். அது தான் இப்படிச் செய்தனான். அதுவேரையாய் முடியப் பாத்தது. சாக நினைச்சன், மறு காலும் வாழ்வுதந்திட்டீங்கள்!'' என்று கூறினாள்.

மேலங்கியற்றுக்கிடந்த பின்புறத் தேகங்களில் அணைத்திருந்த கைவிரல்களினால் ஸ்பரிஸித்து குழந்தையை ஒருகையிலும் மனைவியை மறுகையாலும் தாங்கியபடி நடந்தான், அவளுடைய கணவன்.

''பிழைவிட்டு வருந்துகிறவர்களை மன்னிச்சு அவர்களுக்கு வாழ்வு கொடுக்கிறவர்கள் உண்மையிலை கடவுள் அண்ணே'' என்றபடி, தான் இருந்த காஷியர் பெட்டியருகில் முதலாளிக்கும் கமலிக்கும் இடம் விட்டு நகர்ந்து நின்றான் அந்த ஒருவன்.

புதிதாக ஏற்பட்ட வாழ்வில் புதிதாக ஏற்பட்ட நாணத்தில் உடல் குறுக, தனது மேலாடையை எடுத்துப்போர்த்தியபடி குசினியைநோக்கி நடந்தாள் கமலி.

---

## இலங்கையில் ஒலிபரப்பு சேவை: 3

# அறிவிப்பாளர் பட்ட அவலங்கள்

— வி. என். பி. —

ஒலிபரப்பு சேவை ஆரம்பமான காலத்தில் ஒரே ஒரு அறிவிப்பாளர் தான் இருந்தார். அவர்பாடு மிகவும் திண்டாட்டம். ஒவ்வொரு நாளும் அவர் வேலைக்கு ஆஜராக வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பமுடியாது. தற்செயலாக அவருக்கு சுகவீனமென்றால் தபால்-தந்திப்பகுதியில் வேலை பார்க்கும் ஒரு தமிழ் குமாஸ்தாவை உதவிக்கு அழைப்பார்கள். இல்லாவிட்டால் அகப்பட்டதமிழர் ஒருவரை இழுத்துக்கொண்டுபோய் மைக்குக்கு முன்னால் நிறுத்துவார்கள்! இதுவும் இயலாவிட்டால் சிங்கள அறிவிப்பாளரே 'இதி கொலும்பு றேடியோ நிலியம்' என்று சொல்லி தமிழ் ஒலிபரப்பை ஆரம்பிப்பார்!

அக்காலத்தில் பெரிய தபால் கந்தோரில் வேலை பார்த்தஒரு தமிழ்குமாஸ்தா தான் அடிக்கடி இந்த பதில் வேலைக்கு வருவார். இவர் ஓர் அதிசயமான பேர்வழி. தெரிந்தவர்கள் சொல்லிக் கொடுத்தால் அதைப்பிடிவாதமாக பின்பற்றமாட்டார். தாம்நினைத்தபடி பேசி தமிழ் கன்னியைவலோத்காரம்செய்து விடுவார்.

யாழ்ப்பாணத்தின் சிலபகுதிகளில் ஒரு பொருள் முடிந்துவிட்டதென்பதை குறிப்பதற்கு 'ஒழிந்துவிட்டது' என்று சொல்லுவது வழக்கம். இந்தப் பிராந்திய வழக்கைப் பின்பற்றி மேற்படி குமாஸ்தா ஒரு நிகழ்ச்சியின் முடிவில் 'இத்துடன் இந்த நிகழ்ச்சி ஒழிந்தது' என்று அறிவிப்பார்! இதுபோல அவர் விட்டகோட்டைகள் அனந்தம்.

இரண்டாவது உலகயுத்தம் தொடங்கியதும், சுடச்சுடச் செய்திகளை ஒலிபரப்புவதற்கு ஒரு செய்தி ஆசிரியர் நியமிக்கப்பட்டார். அவரோடு ஒரு 'டெலிபிறின்டரும்' வந்துசேர்ந்தது. அதில் வரும் செய்திகளை ஆசிரியர் 'எடிட்' பண்ணிக் கொடுக்க, ஒருவர் அதை ஆங்கிலத்தில்'டைப்'பண்ணி அறிவிப்பாளருக்கு கொடுப்பார். அறிவிப்பாளர் அதை மொழிபெயர்த்து வேறொரு தாளில் எழுதி வாசிக்க வேண்டும். மொழிபெயர்த்து எழுத நேரம் போதாவிட்டால் அப்படியே ஆங்கிலத்தைப்பார்த்து தமிழில் வாசிக்கவேண்டும். இப்படி நெருக்கடியான சந்தர்ப்பங்களில் பலவித வேடிக்கையான உளறுபடிகளையும் வானொலியில் கேட்கலாம். இன்று பலர் செய்துவரும் கடமைகளை அன்று அறிவிப்பாளர் ஒருவரே செய்ய வேண்டியிருந்தபடியினால் தான் இந்தக்கோளாறுகள் ஏற்பட்டன.

அன்றைய நிகழ்ச்சிக்கு வேண்டிய இசைத்தட்டுகளை தெரிவுசெய்தல், அவற்றில் வெடிப்பு, கீறல் இருக்கிறதோ என்று சோதித்தல், மிகப்பழையதானால் எண்ணை போட்டுத் துடைத்தல், நிகழ்ச்சிகளுக்கு வரும் கலைஞர்களை வரவேற்றல், அவர்களை ஒத்திகைசெய்து பார்த்தல், அவர்களுக்குசன்மானம் வழங்குதல், நிகழ்ச்சிக்கு ஒருவர்கடைசி நேரத்தில் வரத்தவறினால் பதிலுக்கு இசைத்தட்டுகளை தெரிவுசெய்தல், அன்றன்றைய நிகழ்ச்சிகளுக்குகுறிப்புவைத்தல், நிலையத்துக்கு வேண்டியபுதிய இசைத்தட்டுகளை கடையில் வாங்குதல், புதிய கலைஞர்கள் தெரிவில் (ஆடிஷன்) உதவுதல், நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தல், நிகழ்ச்சிகளை அறிவித்தல்-இப்படி இன்னும் பல வேலைகளை அந்த ஒரே அறிவிப்பாளர்தான் செய்யவேண்டும். இவை எல்லாவற்றிற்குமிடையில் செய்திகளை மொழிபெயர்த்து ஒலிபரப்பவும் வேண்டும்.

இப்பொழுது இந்தச்சங்கடங்கள் ஒன்றுமில்லை. செய்திகளை மொழி பெயர்த்து வாசிக்கவும், நிகழ்ச்சிகளை அறிவிக்கவும் வெவ்வேறு அறிவிப்பாளர்கள் இருக்கிறார்கள். மேற்கூறிய மற்ற வேலைகளை கவனிப்பதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள்.

அறிவிப்பாளர் இசைத்தட்டுகளையும், செய்தித்தாள்களையும், பேனை மைக்கூட்டையும் தூக்கிக்கொண்டு ஸ்டுடியோவுக்குள் நுழைவார். அவருக்குமுன் ஒலிபரப்பிக்கொண்டிருந்த அறிவிப்பாளர்ஆசனத்தைக்காலி செய்ய, அதில் உட்கார்ந்துகொண்டு தமது நிகழ்ச்சியை ஆரம்பிப்பார். இசைத்தட்டுகள் சுழலச் சுழல ஹெட்போனில்அதைக்கேட்டுக்கொண்டே செய்திகளை மொழிபெயர்ப்பார். நிலையத்துக்கு மின்சார சக்தியளிக்கும் மோட்டார் யந்திரம் ஒரு பாட்டின் மத்தியில் வேகம் குறைந்து ஓடத்தொடங்கிவிட்டால் இசைத்தட்டைச் சுழலவைக்கும் தட்டும் வேகத்தில்குறைந்துவிடும். பாட்டு அபஸ்வரகதியில் ஒலிபரப்பாகும். உடனே அறிவிப்பாளர் பேனையைச்சுழற்றி எறிந்துவிட்டு இசைத்தட்டின் மத்தியபகுதியை விரல்களால் அமத்திப்பிடித்து தேவையான வேகத்துக்கு தட்டைச் சுழலவிடவேண்டும்! சில சமயம் மொழிபெயர்க்கும் வேகத்தில் இசைத்தட்டு முடிந்துவிட்டதை அறிவிப்பாளர் கவனிக்கமாட்டார். அது தன்பாட்டுக்கு 'கருர் கருர்' என்று சுழன்றுகொண்டேயிருக்கும். அடுத்த அறையில் உள்ள என்ஜினியர் அறிவிப்பாளருக்கு எதிரேயிருக்கும் ஒரு சிவப்பு வெளிச்சத்தை படபடவென்று தட்டுவார். அப்பொழுதுதான் அறிவிப்பாளர்நடப்பதை உணர்ந்து இசைத்தட்டை நிறுத்துவார்.

அறிவிப்பாளருக்கு எதிரே ஒரு ஸ்விச் இருக்கும். அதைக்கீழே தட்டிவிட்டுக்கொண்டுதான் மைக்கில் பேசவேண்டும். பேசிமுடிந்ததும் மறுபடியும் அதை மேலே தட்டிவிடவேண்டும். இல்லாவிட்டால் ஒலிபரப்புக்கென்று கருதப்படாத வார்த்தைகளும் ஆகாயத்திலே போய்விடும். ஒரு சமயம் ஓர் அறிவிப்பாளர் ஸ்விச்சைத் தட்ட மறந்துபோய் 'எங்கையடா

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாடெங்கிலும் நடைபெற்ற சுகாதார விழாக்கள்

**அல்வாயில்**

யாழ்ப்பாணம், ஞாயிறு "சுகாதார சேவை இரு வகைப்படும். நோய் அணுகாமல் தடுத்தல், நோய் வந்தபின் அதனின்றும் குணமடையச் செய்தல். இவை இரண்டிலும் முந்திய விஷயத்தில் கவனம் எடுப்பது சாலவும் சிறந்ததாகும். அதே பணியைத்தான் சுகாதார இலாகா செய்துவருகின்றது."

வடமராட்சிப் பகுதி சுகாதார வார விழாவின் ஓர் அம்சமான சுகாதாரப்பொருட்காட்சிகளை வடமாநில உதவி வித்தியாதிபதி திரு. டி. தணிகாசலம் நேற்றுக்காலை குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்துப் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய முன்றலிலுள்ள இந்து வாலிபர் சங்க மண்டபத்திலும், அம்பாள் வித்தியாலயத்திலும் இப்பொருட்காட்சி நடைபெறுகிறது. விழாச்சபையின் தலைவரான பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. நடராசா, உதவி வித்தியாதிபதியை வரவேற்று விழாவிற்கு தலைமை வகித்தார்.

**பருத்தித்துறையில்**

பருத்தித்துறை, சனி "நமக்கு ஏற்படும் நோய்களில் 56 வீதமானவற்றை சாதாரண பாதுகாப்புமூலம் தடுத்துவிடமுடியும். சுமார் 50 வீதமான மரணம் கூட நமது சக்தியால் தடுக்கக் கூடியவையே, இதைத்தடுப்பதற்கான அத்திவாரம் பாடசாலைகளில் இடப்பட வேண்டும். சிறுவயதில் கைக்கொள்ளும் நடைமுறைகள் அவர்களது வாழ்வில் மட்டுமல்ல வெளியிலும் சகலரிடத்திலும் பரவவேண்டியது அவசியமும் கட்டாயமுமாகும்."

இவ்வாறு பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையில் சுகாதாரவாரவிழாவையொட்டி ஆரம்பமான ஆசிரியர் சுகாதாரக்கலந்துரையாடலை ஆரம்பித்துவைத்த மாவட்ட வித்தியாதரிசி திரு. வி. நடராசா தமது தலைமையுரையில் கூறினார்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அதிபர் திரு. கே. சோமசுந்தரம், சுகாதாரக் கல்வி விரிவுரையாளர் திரு. எஸ். பொன்னம்பலம், இளைப்பாறிய விரிவுரையாளர் திரு. வி. கந்தப்பு ஆகியோர் கலந்துரையாடலுக்கான முன்னுரைகள் வழங்கினர். பாடசாலை சுகாதார சேவைகள், பாடசாலைகளில் சுகாதாரபாடம் கற்பித்தல், பாடசாலையில் யோசனையைப் பற்றிய கல்வி, பாடசாலைகளில் தொற்றுநோய்த்தடை என்னும் தலைப்புக்களில் நான்கு குழுக்களாகக் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

**நாவாந்துறையில்**

யாழ்ப்பாணம், ஞாயிறு "சுகாதார விடயங்கள் பற்றிப்பெருந்தொகையான மக்கள் மத்தியில் கூட்டங்கள் வைத்துச் சொற்பொழிவுகளும், அறிவுரைகளும் நிகழ்த்துவதனால் எவ்வித பலனும் கிடைக்கப்போவதில்லை. சனசமூக நிலையங்கள் மூலம் உற்சாகமுடைய வாலிபர்களுக்கு சுகாதாரப் பயிற்சி வகுப்புகளை வைக்கவேண்டும்" என்று டாக்டர் செ. சிவஞானசுந்தரம் நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூகநிலையத்தில் நடைபெற்ற சுகாதார விழாவுக்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. நீ. எஸ்தாக்கி, மாநகரசபை உணவுப் பரிசோதகர் திரு. சி. ஆறுமுகம், டாக்டர் பி. துரையப்பா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். சிறந்த வளர்ச்சியுடைய குழந்தைகளுக்கான போட்டியும் நடைபெற்றது.

**கைதடியில்**

யாழ்ப்பாணம், ஞாயிறு கைதடி, விக்னேஸ்வர வித்தியாசாலை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் சுகாதாரவிழா இவ்வாண்டு ஒரு புதுமுறையிற் கொண்டாடப்பட்டது. மாணவரும் ஆசிரியரும் சுகாதார சம்பந்தமான படங்களையும், சுலோக அட்டைகளையும் தாங்கிக்கொண்டு கிராமத்தின் பிரதான வீதிகளைச் சுற்றி இறுதியில் பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்தினர்.

"சுத்தப் பழக்கம் நித்தமும் பழகு", "வெற்றிலை வெறுத்திடிற் புற்றுநோய் அணுகா", "ஈயும்கொசுவும் நோயின் நண்பன்", 'சுடுநீர் தன்னை குடிநீராய்க்கொள்', என்பன போன்ற சுலோகங்களை மாணவர் உற்சாகத்துடன் ஒலித்துக்கொண்டு ஊர்வலம் வந்தமை கிராம மக்களிடையே சுகாதாரத்தைப் பெரிதும்பரப்புவதாய் இருந்தது.

தலைமையாசிரியர் திரு. பொ. கந்தையா தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஆசிரியர்கள் சுகாதாரம் பற்றி உரை நிகழ்த்தினர்.

## ஒலிபரப்புச்சேவை

(9ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப்பேயன்' என்றார். வானொலியில் அதைக்கேட்டவர்கள், அறிவிப்பாளர் எந்தப்பேயனைத் தேடுகிறார் என்று ஆச்சரியப்பட்டிருப்பார்கள். அடுத்த நிகழ்ச்சியை ஆரம்பிக்கவேண்டிய ஆங்கில அறிவிப்பாளர்தான் அந்தப் பேயன் என்று எப்படி அவர்களுக்குத் தெரியும்!

REGAL - JAFFNA
NOW SHOWING
GLAMOROUS WOMEN OF THE WORLD
(Adults only)
(Eastman Color

## பீடி புகையிலையால அதிக லாபம்

சுழிபுரம், ஞாயிறு சங்கானை மேற்கு பிரிவில் பீடிபுகையிலை உற்பத்தி செய்தவர்கள் இம்முறை அதிகம் இலாபம் அடைந்துள்ளார்கள். புகையிலைச் சங்கத்தினரால் கடந்த வாரம் தொடக்கம் புகையிலை எடுக்கப்படுகின்றன. தனிப்பட்ட வியாபாரிகளும் போட்டி போட்டுப் புகையிலையை அதிக பணம் கொடுத்து வாங்குவதாக அறியப்படுகிறது.

## ஜி. ஸி. ஈ. (சாதாரணம் பரீட்சை

பம்பலப்பிட்டி, சனி ஆகஸ்ட் 13-ம்திகதி நடைபெறவிருந்த ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சை ஆகஸ்ட் 18-ம் திகதிக்கு ஒத்திப்போடப் பட்டுள்ளது.

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு வண்-வடமேற்கு காட்டுத்துறைப் பிள்ளையார்கோவில் ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப்பெருமானுக்கு இன்று பகல் 12 மணியளவில் அஷ்டோத்தரசதசங்காபிஷேகம் நடைபேறும். இரவு 7மணியளவில் செல்வி ராதா சோமசுந்தரம் 'திருநீலகண்ட நாயனார்' சரித்திரம் கதாப்பிரசங்கம் செய்வார். அதையடுத்து மணவாளக் கோல உற்சவமும் தெரு வீதி உலாவும் நடைபெறும்.

* * *

குரும்பசிட்டி, ஞாயிறு கட்டுவன் பாலர் ஞானோதய வித்தியாசாலையின் பெற்றோர் தினவிழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று வித்தியாசாலை தலைமையாசிரியர் திரு. இ. நமசிவாயம் தலைமையில்நடைபெறவிருக்கின்றது. இவ்விழாவில் மாணவர்களது கலைநிகழ்ச்சிகளும், கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

* * *

யாழ்ப்பாணம். ஞாயிறு மாலை 6 மணிமுதல் வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் "சிவலிங்க சாட்சி" என்னும் பொருள்பற்றியும் இரவு 7-30 மணிமுதல் கோண்டாவில் விநாயகர் ஆலய இராமாயாண விரிவுரையில் "இராமாவதாரம்" என்னும் பொருள் பற்றியும் ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

**கொழும்பு**

## விவேகானந்த சபை வருடாந்தக் கூட்டம்

பம்பலப்பிட்டி, ஞாயிறு கொழும்பு விவேகானந்த சபையின் 62-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை 10மணிக்கு விவேகானந்த மேட்டிலுள்ள சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

மகா சிவராத்திரி தினத்தையும் அடுத்த நாளையும் பொதுவிடுமுறை தினங்களாகப் பிரகடனம் செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் பிரேரணை கூட்டத்தில் கொண்டுவரப் படவிருக்கிறது.

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு இன்று மாலை சங்கானை நிகரை வைரவர் ஆலய முன்றலில் அமைந்துள்ள பொதுமறையரங்கில் திருவள்ளுவர் விழா கொண்டாடப்படவிருக்கிறது. விழாவிற்கு திரு. மு. சிவானந்தன் தலைமை வகிப்பார். கடவுள் வாழ்த்தையடுத்து திரு. கு. முருகானந்தம் வரவேற்புரை நிகழ்த்துவார். 'வள்ளுவரின் கடவுட்கொள்கை' பற்றி சங்கீத பூஷணம் சி. நடராசா பேசுவார். இன்னும் பல அறிஞர் சொற்பொழிவாற்றுவர்.

## மந்திரியை தூஷித்ததாக வழக்கு

பம்பலப்பிட்டி, சனி உள்விவகார மந்திரி டாக்டர் டபிள்யு தகநாயகாவை இராணுவ காப்டன் ஒருவர் தூஷித்தது சம்பந்தமாக செய்யப்பட்டுள்ள புகார் பற்றி மூவர் அடங்கிய விசாரணைக்குழு விசாரணைசெய்யவிருக்கிறது.

காப்டன் எல். ஜி. சிகேரா மீது தொடரப்பட்டுள்ள இந்த வழக்கு விசாரணை அடுத்தமாதம் நடைபெறவிருக்கிறது.

## அரசாங்கசேவை . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பல சோதனைகளுக்கும் நாம் ஆளாக நேரிட்டது. 1964-ம் ஆண்டில்தான் பதவி உயர்வுகளையும் படி உயர்வுகளையும் இழந்ததனால் மிகவும் உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவினத்தின் தாங்கொணாப் பளுவைச் சமாளிக்க முடியாமல் கடனாளிகளாகக் கலங்கிக்கொண்டிருந்த எம்மில் பலருக்கு இந்த ஆண்டில்தான் (1964) கட்டாய ஒய்வு முன்னறிவித்தல்கள் கிடைக்கப் பெற்றன.

ஆனால் இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையிலும் இழைக்கப்பட்ட இன்னல்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து உத்தியோக வாழ்வைத் துச்சமென மதித்து, கொண்டகொள்கைக்காகவும், சங்கத்தின் லட்சியங்களுக்காகவும், பதவிகளையே பணயம் வைத்துப்போராடிய எமது சங்க உறுப்பினர்கள் பலரது தீரத்தை நாம் மறப்பதற்கில்லை. இத்தீரர்களுக்கு நாம் என்றும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

அதே சமயத்தில், எம்மவரில் சிலர், இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எம் போராட்டங்களில் பங்கு கொள்ளாமல் இடையே பின்தங்கிக்கொண்டார்கள். அவர்களது நிலைமைக்காக நாம் பரிதாபப்பட்ட அதே சமயத்தில், அவர்களுக்காகவும்தான் எமதுபோராட்டங்களைத் தொடர்ந்துநடத்தினோம். இந்த உண்மையை அவர்களே மறுக்மாட்டார்கள். அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் விடுக்கவிரும்பும் வேண்டுகோள் யாதெனில் - உங்களால் எமது போராட்டத்திற்கு உதவ முடியாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் எமது போராட்டம் வலுவிழக்கக் கூடியதான செயல்களில் இனியாவது தயவுசெய்து ஈடுபடாதீர்கள்.

இன்று ஒரு தேசிய அரசாங்கம் நாட்டின் நிர்வாகத்தைக் கையேற்றிருக்கிறது. அதில் அங்கம் வகிப்பவர்களில் பெரும்பாலோர், எமது துயரங்களையும் தொல்லைகளையும் தெரிந்தவர்கள். எமக்கு முன்னுள் அரசபீடத்தினரால் இழைக்கப்பட்ட அநீதிகளை நேரிடையாகப் பார்த்தவர்கள். இத்தனை ஆண்டுகளாக எமக்கு இழைக்கப்பட்டு அநீதிகளையும் அங்கிரமங்களையும் ஒழித்து எமது இடர்களையும் இன்னல்களையும் தீர்த்து, இனமத மொழி வேறுபாட்டை அரசாங்க சேவையில் இருந்து முற்றாக அகற்றி, எமக்குப் புனர்வாழ்வைத் தருவதோடு, எம் உள்ளங்களில் நம்பிக்கையின் ஒளியை தோற்றவைத்து எமக்குப் புத்துணர்ச்சியையும் தர வேண்டுமென, சங்கத்தின் சார்பில் இன்றைய தேசிய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

**விற்பனைக்கு**

யாழ்ப்பாண - வீடமைப்பு திட்டத்தில், நவீன வசதிகளுடன் வீடும்காணியும். விலை இருபதாயிரம். தவணையாக பணம் கொடுக்கலாம். மனுச் செய்க. செல்லத்துரை 271, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 571

6 வோல்ட் பற்றறியிலும் மெயின்ஸிலும் பாவிக்கக் கூடிய ஒலிபெருக்கி செற். ச. ஸ்ரீநிவாசன், உடுவில். 572

சாவகச்சேரிப் பட்டினத்தில் காரியாதிகாரி கந்தோராகப் பாவிக்கப்படும் வீடும் வளவும். ச. ஸ்ரீநிவாசன், உடுவில், சுன்னாகம் 573

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (…ம்பிராணை) விஜிதா (ஹட்டன்)

என். டி, ராமராவ், அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா, மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா மற்றும் பலர் நடித்த




லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றிப் புகழும் இராமாயண காவியத்தின் தித்திக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில்பார்த்து மகிழுங்கள்!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org